RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 02 செப்டம்பர் 2022 இதழ்:- 19

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## நாளை இலங்கை திரும்பும் கோட்டாபய மீண்டும் அரசியலில் குதிப்பாரா?



தாய்லாந்தில் தற்போது தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை திரும்புவார் என்பது இப்போது பெரும்பாலும் உறுதியாக இருக்கின்றது. நாளை 03 செப்டம்பர் 2022 சனிக்கிழமை அவர் வருவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலைமையில் அவரை மீண்டும் அரசியலில் ஈடுபடுத்துவதற்காக பொது ஜன பெரமுனவின் ஒரு குழுவினர் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் கூட மற்றொரு பிரிவினர் அதற்கு எதிரான நிலைப்பாட்டியை எடுத்திருப்பதாக தெரிகின்றது.(9ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Desjardins Manulife Foresters

## புலம்பெயர் தமிழர்கள் ஆதிக்கம் மேலோங்கிய இணையனுசரணை நாடுகளுடன் பேசத் தயார்!



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இணையனுசரணை நாடுகள் புதிய தீர்மானத்தைக் கொண்டு வருமேயானால். அது குறித்து எமக்கு எவ்வித கோபமும் இல்லை. மாறாக அவர்கள் முன் வைக்கக் கூடிய (6ம் பக்கம் பார்க்)

## இலங்கை அரகலய போராட்டம் தோல்வியில் முடிந்து விட்டதா?

Go Home Gota அல்லது அரகலயவின் இன்றைய நிலை என்ன? இதனுடைய நாளைய பயணம் எப்படியாக இருக்கப் போகிறது? ஏனிந்தக் கேள்வி எழுகிறது என்றால்(17ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில் ஐ.நா.சபையின் இலங்கைக்கான பிரதிநிதியின் உருக்கமான அறிக்கை!




நான் இலங்கையில் காணாமல்போன பலரின் குடும்பங்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது அன்பிற்குரியவர்களின் இருப்பின் நிலையற்ற(4ம் பக்கம் பார்க்க)

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



18 Years Real Estate Experience

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence / Morningside

**Scarborough** **$508,000**
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


### Sheppard & Warden

**Oshawa** **$595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Fully Renovated Suite

### Kennedy /Progress

**Scarborough** **$548,000**
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Hurontario/Hillcrest

**Mississauga** **$599,900**
Bedrooms: 2+1 Washrooms: 1
Renovated Washroom


### 40 New Delhi Dr

**Markham** **$599,999**
2 Floor Commercial Unit With 2
Washrooms & Separate Entrances

### Markham & Eglinton

**Scarborough** **$589,900**
Bedrooms: 2 Washrooms: 2
Steps To All Amenities; Schools

### King St West/John St


**Toronto** **$679,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept, 9 Ft Ceilings

### William St N & Elgin St

**Kawartha Lakes** **$799,900**
Bedrooms: 6 Washrooms: 3
Attention Investors!

### Highway 535/Island Rd

**Sudbury** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
The Waterfront Property

### Church St/Rossland Rd

**Ajax** **$999,949**
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Luxury Townhome

### Conlin Rd & Simcoe St

**Oshawa** **$1,139,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Sep/Entrance To A Finished Bsmt

### Pharmacy/Lawrence

**Scarborough** **$1,219,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Separate Entrance To Basement

### Donald Cousens / 16th Ave

**Markham** **$1,499,999**
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### 401 & Mccowan

**Scarborough** **$599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Minutes To 401, STC, Go Station

### Edenbrookhill / Sandalwood


**Brampton** **$1,800**
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Midland & Danforth


**Scarborough** **$1,600**
Bedrooms: 2 Washrooms: 1
Basement for rent, Just Renovated

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் மாவட்ட ரீதியில் 1ம், 6ம் இடத்தைப் பெற்ற பாரதி இல்லக் குழந்தைகள்




28 ஆகஸ்ட் 2022 வெளியான க.பொ.த உயர்தர பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2021ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் மாவட்ட மட்ட த்தில் முதலாம் இடத்தையும், ஆறாம் இடத்தையும் எமது பாரதி இல்ல சிறார் கள் பெற்றுள்ளார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். அத்துடன் கலைத் துறையில் இவ் வருடம் பரீட்சை எழுதிய அனைத்து மாணவிகளும் அனைத்துப் பாடங்களி லும் சித்தி எய்துள்ளனர்.

மேலும் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சை உயிரியல் தொழில் நுட்ப பிரிவில் எமது இல்ல மாணவி முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார் ஏனைய பல மாணவிகள் கடந்த வருட ங்களில் கலைத்துறை பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியும் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை வழி நடத்தி இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பாரதி இல்ல முகாமையாளருக்கும், நிர்வாகத் தினருக்கும், இல்லத்தை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் அன்புக்கும் மதிப்பிற் கும் உரிய தந்தை பத்மநாதன் செல்வ ராசா அவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர் களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரி விப்பதோடு சிறந்த பெறுபேறு களைப் பெற்ற சிறார்களுக்கு பாராட்டுக்களை யும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பாரதி இல்லம், அன்பு இல்லம், செஞ் சோலை இல்லம் ஆகியவற்றில் வாழும் 423 குழந்தைகளின் உணவுத் தேவை களை மாத்திரமன்றி அவர்களது கல்வி மேம்பாட்டிற்காகவும் வாழ்வாதாரத்திற் காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை வருடா வருடம் நடாத்தும் இராப்போசன விருந்தில் கலந்து கொண்டு பங்களிப்பை நல்கி அந்தக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக உதவிக் கரம் நீட்டும் கனடிய தமிழ்ச் சமூகத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி யைத் தெரிவித்துக் கொள்வதோடு 23 ஒக்டோபர் 2022 நடைபெறவுள்ள இன் னிசை மாலையும் இராப்போசன விருந் திலும் கலந்து கொண்டு பிள்ளைகளின் வாழ்வுக்கு வளமூட்டுமாறு அன்புரிமை யுடன் அழைக்கின்றோம்.

2021 ஆம் ஆண்டு உயிரியல் தொழில் நுட்ப பிரிவு மாவட்ட மட்டம் முதலாம் இடம் ச.தண்குயில் ஆறாம் இடம் லோ.நிரோஜினி

பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவி கள் 2019 ஆம் ஆண்டு உயிரியல் தொழில்நுட்பம் மாவட்ட மட்டம் முதலாம் இடம் யோ. றஜிதா

கலைத்துறை கோ.துவாரகா உ.உதய குமாரி யோ. கயல்விழி சி. சிவகுமுதா யோ. சரோஜினி ஆகியோராவர்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையைப் பாரப்படுத்துங்கள் தமிழ்த் தரப்பினர் இணைந்து ஐ.நா.வுக்கு அவசர கடிதம்!

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ஐ. சி. சி) இலங்கையை பாரப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ. நா.) பாதுகாப்பு சபையை தூண்டுமாறு வலியுறுத்தி மனித உரிமைகள் பேரவை யின் இணைத் தலைமை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு தமிழ் த்தரப்புகள் ஒன்றாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் களின் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கடிதத்தில், ஆறு தமிழ்த் தேசியக் கட்சி கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புகள் எனப் பல தரப்பினர் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தொடர்ந்து நிறை வேற்றப்பட்டு வந்த பிரேரணைகளை இலங்கை நடைமுறைப்படுத்தத் தவறி யுள்ளது. எனவே மேலும் கால அவகாச ங்களை வழங்குவது அர்த்தமற்றது. ஐ. நா. பாதுகாப்பு சபையில் சீனா தனது 'வீற்றோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தும் என்ற வாதம் குற்றவாளி களை தப்பிக்க வைக்கும் முயற்சியா என்று உலகின் பல தரப்பினரும் சந்தேகத்தை எழுப்புகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் ஆதரமற்றவை. இலங்கையை விட சீனாவோடு மிக நெருக்கமாக இருந்த சூடான் நாட்டை ஐ. நா. பாதுகாப்பு சபை ஊடாக மனித உரிமைகள் மீறல்களுக்காக ஐ. சி. சியில் பாரப்படுத்திய போது அதற்கு எதிராக எந்த நாடும் வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. இதேபோன்று வட கொரியாவையும் ஐ. சி. சியில் பாராப்படு த்துவதற்கான விடயமும் ஐ. நா. பாது காப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு இழைக்கப்பட்ட போர் குற்ற ங்கள், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்காக நீண்டகாலமாக தமிழ் மக்கள் கோரி நிற்கும் நீதியைப் பெற்றுக் கொள்வ தற்கு மனித உரிமைகள் பேரவை மேற் குறிப்பிட்ட உண்மைகளின் அடிப் படையில் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் இலங்கையை பாரப்படுத்து வதற்கு பாதுகாப்புச் சபையை தூண்டு வதற்கான பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

# மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு கையொப்பமிட மறுத்த ஜனாதிபதி ரணில்!

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தான் கையொப்பமிடப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சட்டமா அதிபர் ஊடாக உயர் நீதிமன்ற த்திற்கு அறிவித்துள்ளார். மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு குற்றவாளி களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு 2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி பல அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, தற்போதைய ஜனாதிபதி ரணிலின் முடிவை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன. இது ஜனாதிபதி எதிர்பார்க்கும் நாட்டின் சட்டம் ஒழுங்கை ஏற்படுத் தும் நடவடிக்கைகளுக்கு பெரிய சவாலாக அமையும். இதனை அவர் புரிந்து கொள்ள வேண்டும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை விரட்டி விரட்டி தாக்குதல் நடத்தியும், அவர்களை கைது செய்து தடுத்து வைத்திருக்கும் தீர்மானத்திற்கு கையெழுத்திடுவதும் சவாலானது.

நீங்கள் சர்வதேசத்திற்கு வழங்கும் செய்தி இதுவா என்று கேட்க விரும்புகின் றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமானச் சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில் ஐ.நா.சபையின் இலங்கைக்கான பிரதிநிதியின் உருக்கமான அறிக்கை!



நான் இலங்கையில் காணாமல்போன பலரின் குடும்பங்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது அன்பிற்குரியவர்களின் இருப்பின் நிலையற்றதன்மையானது அவர்கள் மத்தியில் இன்னமும் ஆறாத, வலிமிகுந்த காயமாகவே இருந்து வருகின்றது.

தமது உறவுகள் எங்கே? என்ற கேள்விக்கான பதிலையே அவர்கள் கோருகின்றார்கள். அதற்குரிய பதிலின்றி அவர்கள் தினமும் துன்பப்படுவதுடன் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் அல்லாடுகின்றார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி சுட்டிக்காட்டியுள்ளார்.

அது மாத்திரமன்றி காணாமல் போனோருக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டை வழங்குவதற்கும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற் கொள்ளவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வருடாந்தம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நான் இலங்கையில் காணாமல்போன பலரின் குடும்பங்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது அன்பிற்குரியவர்களின் இருப்பின் நிலையற்றதன்மையானது அவர்கள் மத்தியில் இன்னமும் ஆறாத, வலிமிகுந்த காயமாகவே இருந்து வருகின்றது. தமது உறவுகள் எங்கே? என்ற கேள்விக்கான பதிலையே அவர்கள் கோருகின்றார்கள். அதற்குரிய பதிலின்றி அவர்கள் தினமும் துன்பப்படுவதுடன் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் அல்லாடுகின்றார்கள். உண்மையையும் நீதியையும் கோரிய போராட்டத்திற்கு மத்தியில் அவர்கள் அவ்வப்போது வெகுவாகப் பாதிப்படைந்திருக்கின்றார்கள்.

வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து அனைத்து நபர்களும் பாதுகாப்புப் பெறுவதற்கான சர்வதேச பிரகடனத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டதன் மூலம் வலிந்து காணாமலாக்கப்படல்கள், அது குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் முடிவு, காணாமல்போன நபரின் நிலை ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கு அவர்களது குடும்பத்தாருக்கு இருக்கின்ற உரிமையை ஏற்றுக் கொண்டு, அதனை நோக்கிய பாதையில் இலங்கை முதல் அடியை எடுத்து வைத்தது.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமையானது சரியான பாதையில் வைக்கப்பட்ட அடுத்த அடி என்பதுடன் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் காணாமல் போனோரின் விபரங்கள் என்பன வெளியிடப்பட்டமையானது மிகவும் பயனுடையதோர் அடிப்படையாகும். இருப்பினும் காணாமல் போனோரின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு இன்னும் பல விடயங்களைச் செய்ய வேண்டியிருப்பதுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அவர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு நம்பகத்தன்மை வாய்ந்த செயன்முறையொன்றை முன்வைக்க வேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாம் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பத்தாருடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் அதேவேளை, காணாமல் போனோருக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டை வழங்குவதற்கும், குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற் கொள்ளவேண்டுமென வலியுறுத்துகின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இது குறித்து இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான 30 ஆகஸ்ட் 2022 அண்மையில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் மூலம் 2,000 நாட்களைப் பூர்த்தி செய்த வடக்கு, கிழக்கில் வாழும் குடும்பங்கள் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியிலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம். தமது அன்பிற்குரியவர்களை நினைவு கூருவதற்கு அனைத்து சமூகங்களும் கொண்டிருக்கும் உரிமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்' என்று அப்பதிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

07 செப்டம்பர் 2022 புதன்கிழமை:- பிரதோஷ விரதம்

புரட்டாதிச் சனி விரத நாட்கள்

17,24 செப்டம்பர் 2022 மற்றும் 01,08,15 ஒக்டோபர் 2022 நாட்களாகும்.

17 செப்டம்பர் 2022 1வது சனி விரத உபயம்:- தியாகராஜா யமுனாராணி குடும்பம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# பரிவர்த்தனைப் பணமாக இந்திய ரூபா வாய்ப்பை தமிழர்கள் பயன்படுத்த வேண்டும் - ரெலோ

சர்வதேச கொடுக்கல் – வாங்கல்களுக்கான பரிவர்த்தனை நாணயமாக இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை வர்த்தக, முதலீட்டு, உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிக்கான பாதையாக எமது சமூகம் கையாள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ரெலோ கட்சியின் ஊடகப்பேச்சாளர் சு. சுரேந்திரன்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த விசேட செய்திக் குறிப்பில், சர்வதேச கொடுக்கல் வாங்கல்களு க்கான பரிவர்த்தனை நாணயமாக இந்திய ரூபாய் மத்திய வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை மத்தியவங்கியின் நாணய சபை இதை உத்தியோகபூர்வமாக அறிவித் துள்ளது.

இனிமேல் இலங்கையில் உள்ள ஏற்றுமதியாளர்கள் –

இறக்குமதியாளர்கள் உத்தியோகபூர்வமாக வங்கிகளில் இந்திய ரூபாயை பயன்படுத்தி தங்களுடைய அந்நிய செலாவணி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

டொலர், பவுண்ஸ் மற்றும்பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்விகள் அதிகமாக இருப்பதாலும், வங்கிகளில் இந்த நாணயங்களின் இருப்புக்கள் இல்லாமையாலும் ஏற்றுமதி, இறக்குமதி கள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன. குறிப் பாக, இந்தியாவுடனான வர்த்தகங்களும் பாதிப்படை ந்துள்ளது. இதை சீர் செய்யு முகமாக மத்திய வங்கி இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறது.

ஆகவே, தமிழர் தரப்பு தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் வர்த்தக நடவடிக்கைகளில் சுலபமாக ஈடுபடுவதற்கு இது வழியமைக்கிறது. நமக்குத் தேவையான மருத்துவ பொருட்களிலிருந்து அத்தியாவசிய தேவை கள், உணவு, உடை என சகல விடயங்களையும் தருவித்துக் கொள்வதற்கும் ஏற்றுமதி செய்து கொள் வதற்கும் வர்த்தக ரீதியான உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இதனை ஒரு வரப்பிரசாத மாக தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பூகோள ரீதியாக எமக்கு அண்மையில் உள்ள பெரிய சந்தையாக இந்தியா அமைந்துள்ளது. சர்வதேச நாடு கள் மற்றும் நிறுவனங்கள் இந்த சந்தை வசதியைப் பயன்படுத்துகிறார்கள்.

நாம் இதை முழுதாகப் பயன்படுத்த முயல வேண்டும். வர்த்தக முதலீடுகள் மற்றும் நடவடிக்கைகளை விஸ்தரித்து எமது பொருளாதார நிலையை வளப்படு த்தும் சந்தர்ப்பமாக இதை வர்த்தக, முதலீட்டு, உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிக்கான பாதையாக எமது சமூகம்கையாள வேண்டும் என்றுள்ளது.

# சோவியத் ஒன்றியத்தின் கடைசித் தலைவர் மிகையீல் கோர்பச்சேவ் காலமானார்!

சோவியத் ஒன்றியத்தில் நிலவிய கட்டுப்பாடுகளைத் தளர்த்தியவர், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத் துக்குமான பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர், கம்யூனிஸ்ட் நாடுகளின் தொகுப்பை முன்னின்று நடத்திய சோவியத் ஒன்றியத்தின் கடைசி தலைவர் என்று வரலாற்றில் பல அடையாளங்கள் கொண்ட மிகையீல் கோர்பச்சேவ் தனது 91வது வயதில் காலமானார்.

1985ம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் தலைமைப் பதவிக்கு வந்த இவர் நாட்டின் இரும்புத் திரை கட்டுப்பாடுகளை நீக்கி நாட்டை உலகுக்கு திறந்து விட்டார். உள்நாட்டிலும் பல சீர்திருத்தங்களை அறி முகம் செய்தார். ஆனால், கடைசியில் சோவியத் ஒன்றியம் சிதைவதை இவரால் தடுக்க முடியவில்லை. ரஷ்யா, யுக்ரேன் உள்ளிட்ட பல நாடுகள் சோவியத் ஒன்றியத்தின் சிதைவை அடுத்த தனித்தனி நாடுகளாக உருவாயின.

மிகையீல் கோர்பச்சேவ், வரலாற்றின் போக்கை மாற்றிய வர் என்று கூறி ஐ.நா. தலைமைச் செயலாளர் அண் டோனியா குட்டெரஸ் அஞ்சலி செலுத்தியுள்ளார். 'மிகை யீல் கோர்பச்சேவ் இரக்கம் மிகுந்த அரசியல் தலைவர். அமைதிக்காக சோர்வின்றி பாடுபட்ட, பலமுனை உறவுகளுக்கு ஆதரவான, மிக உயர்ந்த தலைவர் ஒருவரை உலகம் இழந்துவிட்ட என்று அவர் தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

கோர்பச்சேவ் மறைவுக்கு ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார் என்று ரஷ்ய செய்தி முகமையான இன்டர்ஃபேக்சிடம் தெரி வித்துள்ளார் அவரது செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ்.

நம்பகமான, மரியாதைக்குரிய தலைவர் என்று அவரை ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயன் புகழ்ந்து உரைத்துள்ளார்.

கோர்பச்சேவின் துணிச்சலையும், நம்பகத் தன்மையை யும் எப்போதும் வியந்து வந்ததாகவும், சோவியத் சமூகத்தை அவர் திறந்து விட்டது, புதினின் ஆக்கிர மிப்புக் காலத்தில் எடுத்துக் காட்டாக உள்ளது என்றும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரி வித்துள்ளார். உலகம் முழுவதும் பல தலைவர்கள் அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகிறார்கள்.

நீண்ட காலம் நீடித்த, தீவிர நோய் ஒன்றின் காரணமாக அவர் இறந்துவிட்டதாக மாஸ்கோவில் அவர் சேர்க்கப் பட்டிருந்த மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே அவரது உடல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மருத்துவமனையில் சேருவ தும், வீட்டுக்குத் திரும்புவதுமாக அவர் இருந்தார். சிறுநீரக கோளாறு ஒன்றுக்காக அவர் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டதாக கடந்த ஜூன் மாதம் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், அவரது மறைவுக்கான காரணம் தற்போது விவரிக்கப்பட வில்லை.

1985ம் ஆண்டு சோவியத் கம்யூ னிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அதன் வழியாக நாட்டின் தலைவராகவும் ஆனவர் கோர்பச்சேவ்.

அப்போது அவரது வயது 54. சோவியத் கம்யூனிஸ்ட்



கட்சியின் அரசியல் தலைமைக் குழுவான பொலிட் பீரோவின் இளம் உறுப்பினர் அவர். அவருக்கு முன்பு அந்தப் பொறுப்பில் சுமார் ஓராண்டு இருந்த கோன்ஸ்டான்டின் செர்னென்கோ தமது 73வது வயதில் இறந்த நிலையில் இளம் தலைவரான இவர் பதவிக்கு வந்தார்.

கடுமையான கட்டுப்பாடுகளால் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த சோவியத் ஒன்றியத்தில் மக்கள் அரசாங்கத்தை விமர்சிக்க அனுமதிக்கும் 'கிளாஸ் னாஸ்ட்' என்ற திட்டத்தை அறிமுகம் செய்தார். இந்த சொல்லுக்கு 'வெளிப்படையாக' என்று பொருள். அதே நேரம் சோவியத் ஒன்றியத்தின் பல பகுதிகளில் தேசிய வாத உணர்ச்சியைக் கிளறினார். இதன் பலனாக ஒன்றியம் சிதறியது.

அமெரிக்காவுடன் ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு உலக அமைதிக்கு பங்களித்தார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்ட் ஆட்சி யாளர்கள் சிலருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்த போது சோவியத் ஒன்றியத்தின் சார்பில் அவர் தலையீடு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சேகுவேராவின் மகன் திடீர் மரணம்



புரட்சியாளர் சேகுவேராவின் மகன் கமீலோ சேகுவேரா தனது 60 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார். உலக அளவில் இன்று வரை (16ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சமூகம்?

சர்வதேச சமூகம் என்பது ஒரு பொதுவான அவதானம். உண்மையில் சர்வதேச சமூகம் என்பது ஒன்றல்ல – அது பல வகையானது. பல நிலைப்பாடுகளுடையது. தமிழர்களுடைய நிலையில், மேற்குலக நாடுகளும் அந்த நாடுகளை மையம்படுத்தி இயங்கிவரும் அமைப்புக் களும் தான் சர்வதேச சமூகம் என்னும் வகைக்குள் அடங்குகின்றது.

அதிலும் குறிப்பாக சொல்வதானால், அமெரிக்கா தான் இதில் பிரதானமானது. கனடா, இங்கி லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் பலவும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமை களுக்காக குரல் கொடுத்தாலும் கூட, அமெரிக்காவின் அசைவின்றி, இவற்றின் அசைவுகளுக்கு முக்கியத்து வம் இருக்கப் போவதில்லை.

அடுத்தது மேற்படி நாடுகளில், அரசாங்க ஆதரவுடனும், பொதுமக்களின் நன்கொடைகளாலும் இயங்கிவரும் தன்னார்வ கொடை நிறுவனங்கள். அமெரிக்க அரசாங்க த்தின் உதவி நிறுவனமான, அமெரிக்க உதவி நிறுவ னம் (USAID)இதில் முதன்மையானது. அதே போன்று மேற்குலகநாடுகளில் இயங்கிவரும் சர்வதேச அரசுசாரா நிறுவனங்களும் நாம் குறிப்பிடும் சர்வதேச சமூகம் என்பவற்றில்தான் அடங்கும். இவை அனைத்தினதும் ஆதரவையும், இணைந்துத் தான்.

நாம் சர்வதேச சமூகத்தின் ஆதரவு என்பதை, விளங்கிக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது, அமெரிக்கா உட்பட்ட பலவேறு மேற்குலக நாடுகளும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதர வான நிலைப்பாட்டையே கொண்டிருந்தன.

அமெரிக்கா இராணுவ தளபாட உதவிகளை நிறுத்தி யிருந்த போதிலும், அமெரிக்காவின் பயங்கரவாதம் தொடர்பான நிலைப்பாடு, நோர்வேயின் சமாதான முன் னெடுப்புக்களை பலவீனப்படுத்துவதற்கு பயன்பட்ட துடன், ராஜ பக்ஷக்களுக்கு யுத்தத்தை வெற்றி கொள்ள முடியுமென் னும் நம்பிக்கையையும், கூடவே யுத்தத்தின் மீதான உற்சாகத்தையும் ஏற்படுத்துவதற்கு பயன் பட்டது.

1997இல், அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சர்வதேச பயங்கரவாத இயக்கமாக பட்டியலிட்டு, தடைசெய்தது. அதனை இப்போதும் கடைப்பிடித்து வருகின்றது. 2006இல், ஐரோப்பிய ஒன்றியம் விடுத லைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத இயக்கமாக பட்டியலிட்டது. கனடாவும் இதே ஆண்டு விடுதலைப் புலிகளை தடை செய்தது. இவைகள் சமாதான முன்னெடுப்பை பலவீனப்படுத்தியதுடன், ராஜபக்ஷக்களை பலப்படுத்தியது. இந்த பின்புலத்தில் தான் ராஜபக்ஷக்கள் நம்பிக்கையுடன் யுத்தத்தை முன்னெடுத்தனர். பாரிய அழிவுகளுடன் யுத்தம் முடிவு ற்றது.

இப்போது அந்த இறுதி யுத்தத்தின் போதான போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் தான் பேசப்படுகின்றது. கடந்த பன்னிரெண்டு வருடங்களாக பல்வேறு விடயங்கள் பேசப்பட்டாலும் கூட, இதுவரையில் ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கவில்லை. சர்வதேச சமூகத்தின் அழுத்த ங்கள் பெரியளவில், கொழும்மை கட்டுப்படுத்துவதற்கு பயன்பட்டதாகவும் கூறிவிட முடியாது.

அதே வேளை கடந்த பன்னிரெண்டு வருடங்களில் போரால் உருக்குலைந்து போன வடக்கு கிழக்கு தமிழ் மக்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பலப் படுத்துவதற்கு அமெரிக்க உதவி நிறுவனம் மற்றும் மேற்குலக அரசு சாரா நிறுவனங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பணிகளை ஆற்றவில்லை. தென்னிலங் கைக்கே, அதிக கொடைகள் வழங்கப்படுகின்றன. அமெரிக்க உதவி நிறுவனம் ஒரு சில திட்டங்களை வழங்கியிருந்தாலும் கூட கொழும்பு மைய, நிறுவனங் களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தில் (நிதியளவில்) ஒரு பங்கு கூட வடக்கு கிழக்கிற்கு வழங்கப்படுவதாக தெரியவில்லை.

இது அமெரிக்க உதவி நிறுவனத்தின் தவறா அல்லது திட்டங்களை கையாளும் உள்ளூர் அதிகாரிகளின் தவறா? உண்மையில் வடக்கு கிழக்கிற்கு பிரத்தியேக முக்கியத்துவத்தை அமெரிக்க உதவி நிறுவனம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்க வில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்லை. சர்வ தேச சமூகத்தின் பங்களிப்பு என்பது, வெறுமனே ஜெனிவாவில் பிரேரணைக்குவாக்களிப்பதுடன் முடிந்து விடும் ஒன்றல்ல, அதற்குமப்பால், போரினால் உருக்கு லைந்து போன, வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு, சமூதாய முன்னேற்றத்திற்கான பங்க ளிப்பையும்வழங்குவதாகும்.

# புலம்பெயர் தமிழர்கள் ஆதிக்கம் மேலோங்கிய இணையனுசரணை நாடுகளுடன் பேசத் தயார்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இணையனுசரணை நாடுகள் புதிய தீர்மானத்தைக் கொண்டு வருமேயானால், அது குறித்து எமக்கு எவ்வித கோபமும் இல்லை.

மாறாக அவர்கள் முன்வைக்கக் கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். இந்த இணையனுசரணை நாடுகள் என்பதை பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்களின் ஆதிக்கம் மேலோங்கிய நாடுகளாகவே இருக்கின்றன.

இருப்பினும் நல்லிணக்கத்தை நோக்கி நாம் முன்னெடுத்துவரும் நியாயமான நடவடிக்கைகளை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் நீதியமைச்சும் காணாமல் போனோர் அலுவலகமும் ஒன்றிணைந்து 30 ஆகஸ்ட் 2022 செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தன. அதில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நீதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

கேள்வி – அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றை முன் வைப்பதற்கு ஆயத்தமாகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை தயார்நிலையில் உள்ளதா?

பதில்– இந்த இணையனுசரணை நாடுகள் பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்கள் சார்ந்திருக்கும் நாடுகளாகவே இருக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் சிறந்த நிலையிலிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் நல்லிணக்கத்தை நோக்கி நாம் முன்னெடுத்து வரும் செயற்திறன்மிக்க நடவடிக்கைகளை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

காணாமல் போனோர் விவகாரம், அரசியல்கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு விவகாரம் ஆகியவற்றின் நாம் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றத்தை எட்டியிருப்பதுடன் இப்பிரச்சினைகளுக்கு உரியவாறான தீர்வை வழங்க வேண்டுமென்ற நியாயமான நோக்கத்துடன் செயலாற்றி வருகின்றோம். எனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இணையனுசரணை நாடுகள் புதிய தீர்மானத்தைக் கொண்டு வருவது குறித்து எமக்கு எவ்வித கோபமும் இல்லை. மாறாக அதற்குரிய தீர்வு தொடர்பில் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். அது மாத்திரமன்றி புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடனும் இவ்வாறான பேச்சுவார்த்தைகளை மிகவும் வெளிப்படையாகவே முன்னெடுத்திருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

## உங்களைப் பார்த்தால் வெறுப்பாக இருக்கிறது! அமெரிக்காவில் இந்தியப் பெண்கள் மீது தாக்குதல்

அமெரிக்காவில் இந்தியப் பெண்கள் நால்வரை மெக்சிகோ அமெரிக்கன் பெண் ஒருவர் இன ரீதியாக வசை பாடியதுடன் அவர்களைத் தாக்கிய வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கடந்தவாரம் இரவு விடுதி ஒன்றில் 4 இந்திய பெண்கள் கார் நிறுத்தும் பகுதியில் நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒரு பெண் அவர்களை பார்த்து ஆவேசமாக கூச்சலிட்டுள்ளார். எங்கு சென்றாலும் இந்தியர்கள் இருக்கின்றனர் அந்தப் பெண், இந்தியர்களாகிய உங்களைப் பார்த்தால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள இந்தியர்கள் எல்லோரும் (16ம் பக்கம் பார்க்க)




தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# கப்பல் விவகாரத்தில் கூட்டிணைந்த செயற்பட்டமையால் இலங்கையின் இறையாண்மை பாதுகாக்கப்பட்டது! மறைமுகமாக இந்தியா மீது சீனத்தூதுவர் கடும் தாக்கு!

வெளிநாடொன்றின் கப்பலை அதன் கோரிக்கைக்கு அமைவாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்குள் அல்லது வேறு துறைமுகத்திற்குள் அனுமதிப்பது என்பது தமது இறையாண்மைக்கு அமைவாக முற்றுமுழுதாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும்.

ஆனால் எவ்வித ஆதாரங்களுமின்றி 'பாதுகாப்புசார் கரிசனைகள்' என்று கூறிக்கொண்டு வெளியகத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை மீது ஏற்படுத்தப்பட்ட தலையீடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இருப்பினும் சீனா மற்றும் இலங்கையின் கூட்டிணைந்த முயற்சியால் இந்த விவகாரம் சீராகத் தீர்க்கப்பட்டதுடன் அதன் மூலம் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை என்பன பாதுகாக்கப்பட்டதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங் சுட்டிக' காட்டியுள்ளார்.

அது மாத்திரமன்றி அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருப்பதுடன் இதன்போது பெரும்பாலும் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் மீண்டும் பேசுபொருளாகக்கூடும்.

இலங்கை மக்கள் இன்னமும் மிகப்பாரிய பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்ற தற்போதைய சூ ழ்நிலையில், எப்போதும் மனித உரிமைகள் தொடர்பில் உபதேசம் செய்கின்ற நாடுகள் எத்தகைய உதவிகளை வழங்கின என்று பலரும் எண்ணிப் பார்க்கக்கூடும்.

அவர்கள் (அந்த நாடுகள்) அவசியமான ஆதரவை வழங்குவதன் மூலம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் முன்னேற்றமடைவதற்கு உதவுவார்களா? அல்லது அவர்கள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தொடர்ந்து தலையீடு செய்வதற்கான ஓர் மறைமுகக் கருவியாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவார்களா? என்றும் சீனத்தூதுவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அண்மையகால இராஜதந்திர விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு மிகவும் காட்டமான முறையில் வெளியிட்டுள்ள கட்டுரையொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

அண்மைய சில நாட்களில் இலங்கையில் சீனா தொடர்பான இரண்டு செய்திகள் பரவலாகப் பகிரப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இம்மாதத் தொடக்கத்தில் அமெரிக்க சபாநாயகர் நான்ஸி பெலோஸி சீனாவின் தாய்வான் பிராந்தியத்திற்கு மேற்கொண்ட விஜயத்தைத் தொடர்ந்து, சீனா அதற்கு எதிரான நடவடிக்கைகளுடன் கூடிய பிரதிபலிப்பை உடனடியாகக் காண்பித்தது.

அது மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் சுமார் 170 நாடுகள் 'ஒரே சீனா' கொள்கைக்கு தமது வலுவான ஆதரவை வெளிப்படுத்தியதுடன் அமெரிக்காவின் தூண்டுதலுக்குக் கடும் எதிர்ப்பையும் வெளிக்காட்டின.

அதேவேளையின் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இலங்கையிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சீனாவிற்கு ஆதரவாக நீதியை வலியுறுத்தி வெளிப்படையாகப் பேசியமைக்கு நான் நன்றிகூறுகின்றேன். இருப்பினும் இம்மாத நடுப்பகுதியில் சீனாவும் இலங்கையும் மூன்றாம் தரப்பினரின் முரட்டுத்தனமானதும்



நியாயமற்றதுமான தலையீட்டை முற்றுமுழுதாக எதிர்த்ததுடன், இலங்கை அரசிடமிருந்து அனுமதிபெற்றதன் பின்னர் சீனாவின் அறிவியல் ஆய்வுக் கப்பலான 'யுவான் வாங் 5' அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டது.

இவ்விரு விடயங்களும் எவ்வகையிலும் தொடர்புபடாத, பல மைல்களுக்கு அப்பாலுள்ள வெள்வேறு விடயங்களாகத் தென்பட்டாலும், அவ்விரு விடயங்களும் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மிகுந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. அதாவது இரு நாடுகளும் பரஸ்பரம் இரு நாட்டினதும் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் சுயாட்சி ஆகியவற்றை கூட்டிணைந்து பாதுகாக்க வேண்டும் என்பதே அதுவாகும். அத்தோடு அவ்விரு விடயங்களினதும் நடைமுறை மற்றும் முடிவு என்பன சுமார் 65 வருடங்களுக்கு முன்னதாக சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட பரஸ்பர இராஜதந்திரத் தொடர்புகளின் சீரான பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. சீனாவும் இலங்கையும் பரஸ்பர அக்கறைக்குரிய விடயங்களிலும் முக்கிய கரிசனைக்குரிய விவகாரங்களிலும் ஒன்றுக்கொன்று புரிந்துணர்வுடனும் கௌரவத்துடனும் ஒத்துழைப்புடனும் செயற்பட்டு வந்திருக்கின்றன.

கடந்த 1971 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 26 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மற்றும் மேலும் 22 நாடுகளின் இணையனுசரணையுடன் 2758 ஆம் இலக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் அதன் மூலம் 'ஒரே சீனா' என்ற கொள்கை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே நான்ஸி பெலோஸியின் தாய்வானுக்கான விஜயமானது 'ஒரே சீனா' கொள்கைக்கு முற்றிலும் முரணானதாகும். இது சீனாவின் இறையாண்மை மற்றும் சுயாட்சி என்பவற்றைக் கேள்விக்குட்படுத்துவதுடன் தாய்வானின் அமைதி மற்றும் உறுதிப்பாடு என்பவற்றையும் சீர்குலைக்கின்றது.

இலங்கையின் வரலாற்றை எடுத்து நோக்குமிடத்து, அதன் வடக்கிலுள்ள அயல் நாட்டினால் 17 முறை நிகழ்த்தப்பட்ட படையெடுப்புக்களையும் மேற்குலகத்தின் 450 வருடகால காலனித்துவ ஆட்சியையும் பயங்கரவாதத்திற்கு

(22ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான சீனத் தூதுவரின் கருத்துக்கு இந்தியா கொடுத்த பதிலடி!

இலங்கைக்கான சீனத் தூதுவர், வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்த பல கருத்துக்கள் அடிப்படை இராஜதந்திர நெறிமுறைகளை மீறியுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் குற்றம் சாட்டியுள்ளது.

தனது டுவிட்டர் பதிவில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரபூர்வ ட்விட்டர் கணக்கில் இருந்து தொடர் ட்வீட்டுகள் மூலம் இந்தியா தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்தது.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இதே கருத்தை ட்வீட் செய்திருந்தது இந்தியத் தூதரகம். சீனத் தூதுவரின் கருத்துகள் குறித்து நாம் கவனஞ் செலுத்தியுள்ளோம். அடிப்படை இராஜதந்திர நெறிமுறைகளை அவர் மீறுவது, ஒரு தனிப்பட்ட பண்பாகவோ அல்லது ஒரு பொதுவான தேசிய அணுகுமுறையின் பிரதிபலிப்பாகவோ இருக்கலாம், என்று ட்வீட் செய்த இந்தியத் தூதரகம்,

மேலும் இலங்கைக்கு வடக்கே அமைந்திருக்கும் அயல்நாட்டின் மீதான அவரது நோக்கு, அவரது சொந்த நாட்டினுடைய நடத்தையின் பிரதிபலிப்பாக இருக்கலாம். ஆனால், இந்தியா அவ்வாறானதொன்றல்ல என்பதனை நாம் அவருக்கு உறுதிப்படுத்துகின்றோம்.

விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்குரிய தெனக் கூறப்படும் கப்பலொன்றின் வருகைக்கு பூகோள அரசியல் சூழலை பொருத்துவிக்கும் அவரது நடவடிக்கை ஒரு பாசாங்கான செயலாகும்.

தற்போது, மறைமுகமானதும் கடன்களை அடிப்படையாகக் கொண்டது மான நிகழ்ச்சி நிரல்களே குறிப்பாக சிறிய நாடுகளுக்கு மிகப் பாரிய சவாலாக உள்ளன. அத்துடன், அண்மைக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் ஓர் எச்சரிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு தற்போது ஆதரவு தேவையாக உள்ளதே தவிர மற்றொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலான தேவையற்ற சர்ச்சைகளோ, அழுத்தங்களோ அல்ல என்று இந்தியா கூறியுள்ளது.

தாய்வான் நீரிணையின் இராணுவமயமாக்கல் மற்றும் சீனாவின் யுவான் வங் 5 கப்பலின் ஹம்பாந்தோட்டை வருகை ஆகியவற்றை தொடர்புபடுத்தி இலங்கைக்கான சீனத்தூதுவர் எழுதிய கட்டுரை குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்முகமாக உயர் ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் மேலுள்ள ட்விட்டர் பதிவுகளை வெளியிட்டுள்ளார் என்ற குறிப்பும் அதில் வெளியிடப்பட்டது.

அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு
பத்திரிகை நடாத்தும்
10வது ஆண்டு விழா
தமிழக - ஈழத்தமிழக பாடகர்களுடன்
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# சீனா இலங்கையை பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச் சீட்டாக பயன்படுத்தியுள்ளது என இந்திய மூத்த அதிகாரி கடும் சாடல்!



சீனா ஒரு பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச்சீட்டாக இலங்கையைப் பயன்படுத்தியிருக்கின்றது. கடந்த சில வருடங்களாக சீனாவினால் பின்பற்றப்பட்டு வந்த கொள்கையே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது என்று இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்புப் பிரதி ஆலோசகர் பங்கஜ் ஷரன் கடுமையாக சாடியுள்ளார்.

அண்மைக்கால இராஜதந்திர விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த வார இறுதியில் மிகவும் காட்டமான கட்டுரையொன்றை வெளியிட்டிருந்த இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங், 'வெளிநாடொன்றின் கப்பலை அதன் கோரிக்கைக்கு அமைவாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்குள் அல்லது வேறு துறைமுகத்திற்குள் அனுமதிப்பது என்பது தமது இறையாண்மைக்கு அமைவாக முற்றுமுழுதாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும் என்று அக்கட்டுரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அது மாத்திரமன்றி எவ்வித ஆதாரங்களுமின்றி 'பாதுகாப்புசார் கரிசனைகள்' என்று கூறிக் கொண்டு வெளியகத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றின் மீது ஏற்படுத்தப்பட்ட தலையீடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலடி வழங்கியிருந்த இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், இலங்கைக்கான சீனத்தூதுவரின் இந்தியா மீதான பார்வை அவரது சொந்த நாட்டின் நடத்தையின் பிரதிபலிப்பாக இருக்கலாம் என்றும் ஆனால் இந்தியா அவ்வாறானதொரு நாடல்ல என்றும் சுட்டிக்காட்டியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்புப் பிரதி ஆலோசகர் பங்கஜ் ஷரன், 'கடந்த சில வருடங்களாக சீனாவினால் பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகளே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்ற உண்மையைக் கருத்திற் கொண்டு இலங்கை மீதான கருணையை வெளிப்படுத்தி இவ்வாறானதொரு அறிக்கையை வெளியிடக்கூடிய தன்மையை சீனா கொண்டிருக்கின்றது என்பது மிகமுக்கியமானதாகும்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும் 'சீனா ஒரு பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச்சீட்டாக இலங்கையைப் பயன் படுத்தியிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மிக நீண்ட காலமாகவே இலங்கையுடன் இந்தியா நல்லுறவைப் பேணி வந்திருப்பதுடன் அது எதிர் வருங்காலங்களிலும் தொடரும். எமது அயல்நாடுகளைக் கையாள்வதில் நாம் வேறுவிதமான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றோம்' என்றும் பங்கஜ் ஷரன் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்விருக்கமன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையச் செயற்றிட்டங்களுக்கு அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்துக்குத் தற்காலிக அனுமதியே வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கான எதிர்ப்புக்களின் பின்னணி குறித்து ஆராயப்படும். தேவைப்படின் அமைச்சரவையின் முடிவு மீள் பரிசீலனை செய்யப்படும் இவ்வாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்தார்.

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த இடங்களில் இதற்கு எதிர்ப்புக்கள் வந்தால் அந்த எதிர்ப்புக்களின் பின்னணி தொடர்பில் ஆராய வேண்டும். அரசியல் பின்புலத்துடனும் அந்த எதிர்ப்புக்கள் வரக்கூடும். இது தொடர்பில் அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவோம். அமைச்சரவையின் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை வந்தால் அதையும் நாம் செய்வோம்.

அனைத்துச் செயற்றிட்டங்களும் மக்களின் நலன் கருதியே இருக்கும். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் செயற்றிட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்காது என்றார்.

இதேவேளை பலாலியில் உள்ள யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திற்கான விமான சேவையை எயார் இந்தியா நிறுவனம் அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, வியாழன் அன்று நடைபெற்ற கூட்டத்தில், எயார் இந்தியா நிறுவனம் அடுத்த மாதம் முதல் வாரத்திற்கு இரண்டு முறை பலாலிக்கு விமானங்களை இயக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நாளை இலங்கை திரும்பும் கோட்டாபய மீண்டும் அரசியலில் குதிப்பாரா?

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

தாய்லாந்தில் தற்போது தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை திரும்புவார் என்பது இப்போது பெரும்பாலும் உறுதியாக இருக்கின்றது. நாளை 03 செப்டம்பர் 2022 சனிக்கிழமை அவர் வருவார் என அவருக்கு நெரு க்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலைமையில் அவரை மீண்டும் அரசியலில் ஈடுபடுத்துவதற்காக பொது ஜன பெரமுனவின் ஒரு குழுவினர் தீவிரமான முயற்சிகளை மேற் கொண்டு வருகின்ற போதிலும் கூட மற்றொரு பிரிவினர் அதற்கு எதிரான நிலைப்பாட்டியை எடுத்திருப்பதாக தெரிகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 24ஆம் தேதி நாடு திரும்புவதற்கு முதலில் திட்டமிட்டிருந்தார். இறுதி வேளையில் அவரது வருகை பிற்படப்பட்டது. கோட்டாபய நாடு திரும்புவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை என கூறப்படுகின்றது. ரணிலுடன் அவர் நடத்திய தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்து அவரது வருகை ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை திரும்ப வேண்டும் என கோட்டா விரும்புவதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக அமெரிக்காவிற்கான அவரது விசா ரத்து செய்யப்பட்டு இருக்கின்ற அதே வேளையில் கிரீன் காட்டை பெறுவதற்கு அவரது விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையில் உடனடியாக அமெரிக்கா செல்வது அவருக்கு சாத்தியமற்றது. மத்திய கிழக்கு உட்பட பல்வேறு நாடுகளில் அரசியல் அடைக்கலம் பெறுவதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்ட போதிலும் கூட அந்த நாடுகள் அனைத்துமே அதனை நிராகரித்து விட்டன.

இந்த நிலைமையில் நாடு திரும்புவது என்பதை விட அவருக்கு வேறு தெரிவுகள் எதுவும் இருக்கவில்லை. இலங்கை திரும்புவது என அவர் முடிவெடுத்ததற்கு இதுதான் முதலாவது காரணம் என சொல்லப்படுகின்றது.

இரண்டாவதாக அவரது பிரயாணம் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கி இருப்பதற்கான கட்டணங்கள் என ஏற்கனவே பல கோடிகளை தாண்டி இருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி என்ற முறையில் அவருக்கான கொடுப்பனவை அரசாங்கமே வழங்கியதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணபடுத்தனா முதலில் தெரிவித்திருந்த போதிலும் கூட அது தவறான தகவல் என தகவல் திணைக்களம் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியின் மகன் தான் இந்த செலவுகளை கொடுத்து வருகிறார் என்ற ஒரு தகவலும் வெளியாகி இருக்கின்றது. இந்த அளவு பெருந் தொகையான பணம் அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பிலும் ஊடகங்கள் பல கேள்விகளை எழுப்பி இருக்கின்றன.

தாய்லாந்தில் 90 நாட்கள் தங்கி இருப்பதற்கான விசா அனுமதி கோட்டாவுக்கு கிடைத்திருக்கின்ற போதிலும் கூட அவ்வளவு நாட்கள் தாங்கி இருப்பதற்கு ஏற்படக்கூடிய செலவினத்தை கருத்தில் கொண்டும் நாடு திரும்புவது என்ற முடிவை அவர் எடுத்ததாக சொல்லப்படுகின்றது. கோட்டாபயவுக்கு உதவியாக இருவரும் அவரது மனைவியின் மனைவிக்கு உதவியாக இருவரும் என ஆறு பேருடைய செலவுகள் முன்னாள் ஜனாதிபதியின் மகனுடைய பொறுப்பில் இருப்பதால் அதனை தொடர்ந்து பொறுப்பேற்க முடியாத நிலைமையில் அவர் இருப்பதாக சொல்லப்படுகின்றது. இந்த செலவீனங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது நாடு திரும்புவது என கோட்டாபய ராஜபக்ஷ முடிவெடுப்பதற்கு இரண்டாவது காரணமாக சொல்லப்படுகின்றது.

தாய்லாந்தில் 90 நாட்கள் தான் இருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் கூட ஹோட்டல் அறையை விட்டு அவர் வெளியேறக் கூடாது என்ற உத்தரவு அவரை பெரிதும் சங்கடத்தில் உள்ளாகி இருப்பதாக கூறப்படுகிறது. உளரீதியாக இதனால் அவர் பெரும் அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றார். நாடு திரும்புவதற்கு இது மூன்றாவது



காரணம் என சொல்லப்படுகின்றது.

இதனை விட நாட்டில் உருவாகியிருந்த கிளர்ச்சிகள் பெருமளவுக்கு அடக்கப்பட்டு விட்டன. இதில் முன்னணியில் இருந்து செயல்பட்ட பலர் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். அல்லது கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதனால் ஜீலை 9ஆம் தேதி நடைபெற்றது போன்ற ஒரு மக்கள் கிளர்ச்சி மீண்டும் நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லை என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. இதனை தான் நாடு திரும்புவதில் பிரச்சனை இருக்காது என முன்னாள் ஜனாதிபதி கருதுவதாக தெரிகின்றது.

இந்தப் பின்னணியில் நாடு திரும்புவதற்கு அவர் எடுத்த முடிவுக்கு பொது ஜன பெரமுனவில் ஒரு பகுதியினர் ஆதரவை தெரிவித்து இருக்கின்றார்கள். அவருக்கு தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து அவர்கள் கோரிக்கை முன் வைத்திருக்கின்றார்கள். இதனை விட மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாகவும் இந்த விவகாரத்தை அவர்கள் கொண்டு சென்றிருக்கின்றார்கள். இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட கோட்டாபய நாடு திரும்பினால் அவருக்கு தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கின்றது. இந்தப் பின்னணியில் செப்டம்பர் முதல் வாரத்தில் பெரும்பாலும் நாளை செப் ரெம்பர் 3 ஆம் திகதி சனிக்கிழமை அவர் நாடு திரும்புவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

கோட்டாபய அரசியலில் மீண்டும் இறங்குவாரா என்ற கேள்வி பல்வேறு மட்டங்களில் எழுப்பப்படுகின்றது. அவரை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வர வேண்டும் என்ற இலக்குடன் ஒரு சிலர் செயல்பட்டு வருகின்றார்கள். கோட்டாவை ஜனாதிபதி ஆக்குவதற்காக பின்னணியிலிருந்து செயல்பட்ட வியட்மக போன்ற அமைப்புகள் மீண்டும் இதற்காக களத்தில் இறக்கப்படுகின்றன.

இருந்த போதிலும் ராஜபக்ஷா குடும்பத்தினர் மத்தியில் கூட கோட்டாபய நாடு திரும்புவதற்கு முழுமையான ஆதரவு இருப்பதாக தெரியவில்லை. சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவரது அண்ணனான மஹிந்த ராஜபக்ச கடந்த வாரம் அளித்துள்ள பேட்டி ஒன்றில் கோட்டாபய தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்றாமல் சென்றுள்ளார் என்பதை ஒரு குற்றச் சாட்டாக அவர் முன் வைத்திருந்தார். கோட்டா ஒரு அரசியல்வாதியாக செயல்படவில்லை. தங்களுடைய ஆலோசனைகள் இதனையும் அவர் பொருட்படுத்தவில்லை என்ற ஒரு கருத்தையும் மஹிந்த ராஜபக்ஷம் முன் வைத்திருந்தார். ராஜபக்ச குடும்பத்தினருக்கும் மிகவும் நெருக்கமானவரான ரஷ்யாவுக்கான முன்னால் தூதுவர் உதயங்க ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து ஒன்றில், கோட்டாபயவை கடுமையாக விமர்சித்திருந்தார். கோட்டாபய நாடு திரும்பினார் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படலாம்'' என்று ஒரு எச்சரிக்கையை அவர் விடுத்திருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

கோட்டாபயவின் அனுபவமற்ற சில செயற்பாடுகளால் தான் ராஜபக்ச குடும்பம் அரசியலில் இருந்து ஒதுக்கப்படும் நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. அவர் மீண்டும் நாடு திரும்பி அரசியல் ஈடுபடுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டால் இதே போன்ற ஒரு நிலைமை ஏற்படலாம் என்ற ஒரு அச்சம் மஹிந்தவுக்கும் இருப்பதாக தெரிகின்றது.

தன்னுடைய மகனை மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபடுத்தி நாட்டின் தலைமை பதவிக்கு தயார்படுத்துவது என்ற இலக்குடன் செயல்பட்டு வரும் மஹிந்தவை பொறுத் தவரையில் இதனை அவர் விரும்ப மாட்டார். அவருடைய அண்மைக்கால கருத்துக்கள் கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வருவதை அவர் விரும்பவில்லை என்ற கருத்தையே உணர்த்துகின்றது.

மறுபுறத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவும் கோட்டாபய மீண்டும் வந்து அரசியலில் ஈடுபடுவதை விரும்ப மாட்டார். கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்ததன் பின்னரே அமைதியான ஒரு சூழ்நிலையை இலங்கையில் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

கோட்டா மீண்டும் திரும்பி பிரதமர் பதவியோ அல்லது முக்கியமான ஒரு எந்த ஒரு பதவியோ இலக்கவைத்து செயல்படுவாராக இருந்தால் அது ரணில் விக்கிரமசிங்காவுக்கு நெருக்கடியை கொடுக்கும். அதன் மூலமாக ஏற்படக்கூடிய ஸ்திரமற்ற தன்மை இலங்கைக்கு கிடக்கக் கூடிய சர்வதேச உதவிகளையும் பாதிக்கும். அதனால் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் கோட்டாபய நாடு திரும்புவதை ஜனாதிபதி ரணில் அனுமதித்தாலும் கோட்டா தீவிரமான அரசியலை இறங்குவதை ரசிக்க மாட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

இதனைவிட கோட்டாவின் குடும்பத்தினரும் அவரது அரசியலால் நிறைய துன்பங்களை அனுபவித்து விட்டனர். கோட்டா மீண்டும் அரசியலில் இறங்குவதை அவர்களும் ரசிக்கத் தயாராக வில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய சிறப்புச் சலுகைகள் கோட்டாவுக்கும் வழங்கப்படுமா என்பதும் சா்ச்சைக்குரியதாகவே இருக்கின்றது. இரண்டரை வருடத்தில் தப்பிச் சென்று பதவி துறந்த ஒருவர் அந்த சலுகைகளுக்கு உரித்துடையவரல்ல என்ற கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. அதனால், அவருக்கான உத்தியோகபூர்வ வீடு, பாதுகாப்பு என்பன நீதிமன்றத்தின் மூலம் கேள்விக்குள்ளாக்கப்படலாம்.

ஆக, நிம்மதியாக தூங்கக் கூட முடியாத ஒருவராகத் தான் கோட்டாவின் எதிர்காலம் அமையப் போகின்றது.

இந்தப் பின்னணியில் கோட்டா நாடு திரும்பினாலும் அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடுவாரா என்பதும், அரசியலில் ஈடுபட்டால் அதற்கான பிரதிபலிப்புகள் எவ்வாறானதாக அமையும் என்பதும் கேள்விக்குறியாக இருக்கும்!

அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
10வது ஆண்டு விழா தமிழக – ஈழத்தமிழக பாடகர்களுடன்
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 ஆகஸ்ட் 2022 முதல் 02 செப்டம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 39வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை அரசரெத்தினம்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது 39வது ஆண்டு நினைவு நாள் 02 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்தின்றார்கள்.

## 49வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு நடராஜா

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமையாகும்.அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு நடராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி (காந்தன்) அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 30 ஆகஸ்ட் 2022 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 3வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 30 ஆகஸ்ட் 2022 விநாயகர் சதுர்த்தி தினமான வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி நிர்மலாதேவி தவலிங்கம்

### (ஆசிரியை - சாந்தி)

பருத்தித்துறை தும்பலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் (சாந்தி) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 23 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை மயிலிட்டிஐயப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி அவர்களது 11வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி திவ்வியாவின் 13வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி திவ்வியா தனது பெற்றோர்கள் உடன்பிறந்தோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி அல்லிராணி செல்வராஜா அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி அல்லிராணி செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சரசாலை சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகசேவையாளரும் சட்டத்தரணியுமான திரு கணபதிப்பிள்ளை கதிர்காமசேகரர் அவர்களது நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை கனடாவுல் வசிக்கும் திரு பிரகலாதன் கணேசமூர்த்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் பிரகலாதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து 27 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் கெவின் நடராஜா செல்வி மாதுரி மாணிக்கவாசகர் ஆகியோரது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



28 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் கெவின் நடராஜா செல்வி மாதுரி மாணிக்கவாசகர் ஆகியோரது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




28 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் கெவின் நடராஜா செல்வி மாதுரி மாணிக்கவாசகர் ஆகியோரது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



29 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமை கனமாவின் மூத்த வழக்கறிஞர் அமரர் திரு ஜெகன்மோகன் நவரத்தினம் அவர்களது பிறந்த நாள் நினைவாகும். அன்றையதினம் அவரது பிறந்த நாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை யாழ்.தொல்புரத்தைச் சேர்ந்த திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரர்கள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




இவர்களுக்காக

23 ஒக்டோபர் 2022

இன்னிசை மாலையும்

இராப்போசன விருந்தும்

தொடர்புகளுக்கு

416 841 9600




02 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமை அளவெட்டியைச் சேர்ந்த திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது 39வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**

# தர்மஸ்ரீ அவர்களின் தர்மப் பணிக்கு நீங்களும் உதவலாம்













கனடாவில் கந்தரோடை மக்கள் மன்றத்தின் முக்கிய செயற்பாட்டாளராகத் திகழும் திரு தர்மஸ்ரீ (ஸ்ரீ) அவர்கள் பெயர் புகழை விரும்பாத ஒரு மனித நேயச் செயற்பாட்டாளர். தீவிரமான தமிழ்த்தேசியப் பற்றாளர். அண்மையில் அவர் தாயகம் சென்றிருந்தார். அதற்கு முன்னதாக அங்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக தனக்கு தெரிந்தவர்கள் மூலம் சக்கர நாற்காலிகளைச் சேகரித்து கப்பல் மூலம் அனுப்பி வைத்தார். அங்கு சென்று தேவையுடைய போரினால் பாதிக்கப்பட்ட குறிப்பாக போராளிகள், அவர்களது பெற்றோர்கள் என அடையாளம் கண்டு அவர்களுக்கு வழங்கியுள்ளார். அத்துடன் ஒரு போராளிக்கு சக்கர நாற்காலியை வழங்கிய திரு ஸ்ரீ அவர்கள் அந்த முன்னாள் போராளி தனது வீட்டு வளவை விட்டு வீதிக்கு வருவதற்கு குண்டும் குழியுமாக இருந்த பாதையில் சிரமப்படுத்தை உணர்ந்து அந்த வீதியையும் புனரமைத்துக் கொடுத்துள்ளார்.

அது மாத்திரமல்ல. தன்னால் முடிந்தவரை சில குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றார். இவ்வளவுக்கும் இவர் ஒரு வர்த்தகப் பிரமுகரோ தொழில் அதிபரோ அல்ல. சாதாரண வேலை பார்க்கும் மனித நேயப் பண்பாளர். ஓர் ஐயப்பன் பக்தர்.

அன்பர்களே! உங்களிடம் அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் பாவனை செய்யாமல் நல்ல நிலையில் உள்ள சக்கர நாற்காலிகள் இருப்பின் அல்லது வாங்கிக் கொடுக்க விரும்புபவர்கள் திரு ஸ்ரீ அவர்களோடு 647 328 8880 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104



## ANNUAL GENERAL MEETING 2022

The 27th Annual General Meeting will be held on Saturday October 01, 2022 at 10 am to 1pm.

Time :- 10 am to 1 pm on 01/Oct/2022 Saturday

Place :- Canada Sri Ayyappa Temple

Elections for 4 New Board of Directors for 2022, will be held on Saturday 29 Oct 2022

Time :- 10 am to 2 pm on 29 Oct 2022 Saturday

Place :- Canada Sri Ayyappan Temple Hall

## முக்கிய அறிவித்தல் :- வருடாந்த பொதுக்கூட்டம் 2022

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜத்தின் 27வது பொதுக்கூட்டம், ஐப்பசி 01, 2022 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் 1 மணிவரை இடம்பெறும்.

காலம் :- 01/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 1 மணிவரை

இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

புதிய நான்கு நிர்வாகிகளுக்கான தேர்வு 29 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம், பகல் 2 மணிவரை இடம் பெறும்.

காலம் :- 29 ஒக்டோபர் 2022 நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 2 மணிவரை

இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

மேலதிக தொடர்புகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

416.321.6104, 416.321.7558

*அறங்காவலர் சபையினர்*

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca






Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி
கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி
ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth





# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER



MASTER: KASHI GURUJI
OVER 40+ YEARS OF EXPERIENCE

அனைத்து மதத்தினரும் வரவேற்கப்படுகிறார்கள்.
Black Magic Removal in 24hours.
100% முடிவு உத்தரவாதம்.
வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு.
PRIVATE & CONFIDENTIAL
7 நாட்களும் திறந்திருக்கும்.
Call for Appointment

கைரேகை, எண்ஜோதிடம்,
ஜாதகம் விளக்கம்,
வெத்திலையில்
மை போட்டுப் பார்த்தல்,
இறந்தகாலம், நிகழ்காலம்,
எதிர்காலம் பற்றி அறிதல்.
Specialist in bringing backloved ones.

- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- பிள்ளைகளின் திடீர் குணமாற்றங்கள்
- லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.
உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும்.



647-324-9991 | 437-833-7796

Unit 16-2857 Lawrence Ave East
Scarborough, ON M1P 2S8

2891 A Derry Road East
Mississauga, ON, L4T 1A6

# ஜனாதிபதி ரணில் பலமடைந்து வருகிறாரா?

பயங்கரவாத தடைச் சட்டம் அரகலயவின் மீது பாயத் தொடங்கி விட்டது. மனித உரிமைகள் பாதுகாவலர்களான வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்மா தேரர் ஆகியோர் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். அவர்களை தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திட வேண்டாம் என ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக் கொள்கின்றேன், அவ்வாறு செய்வது இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும் என்று மேரி லோலர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். மனித உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்பாட்டாளர்கள் தொடர்பான ஐநாவின் விசேட அறிக்கையாளர் அவர˙.எனினும், அந்த இருண்ட நாளை அவரால் தடுக்க முடியவில்லை.

கடந்த 21ஆம் திகதிவரை மொத்தம் 3353 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 1255 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

முழு உலகத்தையும் திருப்பி பார்க்க வைத்த அரகலயவின் பிரதான செயற் பாட்டாளர்கள் பயங்கரவாதிகளாக கணிக்கப்படும் ஒரு நிலைமை ஏன் வந்தது? அரசியல் எதிர்ப்பை ஆக்கத் திறனோடு வெளிப்படுத்திய படைப்பாளிகள் குற்றவாளிகளாக வேட்டையாடப்படும் ஒரு நிலைமை ஏன் தோன்றியது?

காரணம் அரகலய மீண்டும் தோற்றம் பெறக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை.

அரகலயவை உற்பத்தி செய்த பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தும் முற்றாக அகற்றப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தபின் எரிவாயு எரிபொருள் போன்றன ஒப்பிட்டளவில் கிடைக்க தொடங்கி விட்டன. ஆனால் பொருட்களின் விலைகள் இறங்கவே இல்லை. அரசாங்கம் முட்டையின் விலையை நிர்ணயித்த போதிலும் சந்தையில் முட்டையின் விலை இறங்கவே இல்லை. அரசாங்கத்தின் விலை நிர்ணயங்கள் மக்களை கவரும் நோக்கிலானவை தவிர யதார்த்தமானவை அல்ல என்று வியாபாரிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

மண்ணெண்ணையின் விலை அதிகரித்து விட்டது. அது விவசாயிகளாலும் கடத்தொழிலாளர்களாலும் தாங்க முடியாத அதிகரிப்பு. எனவே கீழ் மத்தியதரவர்க்கம் மற்றும் ஏழைகளால் நுகரமுடியாத அளவுக்கு விலைகள் உச்சத்தில் நிற்கின்றன. இது மக்களை எப்பொழுதும் தெருவுக்கு கொண்டு வரக்கூடியது. அனைத்துலக நாணயநிதியத்தின் உதவிகள் சீனாவின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முடிவுகளில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

எனவே மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் மக்கள் ஈடுபடுவதை தடுப்பதற்கு முன்னணிச் செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ளே போட வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. அதாவது ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் மீண்டும் தோன்றலாம் என்ற ஆபத்தை அவர் முன்னுணர்கிறார். இது முதலாவது பிரதான காரணம்.

இரண்டாவது காரணம் மே ஒன்பதாம் திகதியும் ஜீன் 9ஆம் திகதியும் ஆளுங் கட்சி அரசியல்வாதிகளின் சொத்துக்களையும் வீடுகளையும் தேடித்தேடி எரித்து அழித்தவர்களைப் பழிவாங்குவது. மீண்டும் ஒரு தடவை ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியல்வாதிகளின் வீடுகளை தாக்கத் துணியாதபடி அவர்களை அச்சுறுத்த வேண்டும். அதற்காகத் தான் பயங்கரவாத தடைச் சட்டத்தை அவர் உபயோகித்திருக்கிறார். அதாவது தன்னை பாதுகாத்த 134 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை அவருக்குண்டு.

பொருளாதார நெருக்கடியை நீக்கினால் பிரச்சனைகளின் மூலகாரணம் பலவீனமடைந்து விடும் என்று நம்புகிறார். பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது என்று சொன்னால் அரசியல் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவது என்று சொன்னால் எதிர்க்கட்சிகளையும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக் கூடிய மக்களையும் சமாளிக்க வேண்டும். அதற்கு, சர்வ கட்சி அரசாங்கம் ஒரு கவர்ச்சியான தீர்வு.ஆனால் தந்திரசாலியான ரணிலை நம்பி அரசாங்கத்தில் இணைய எதிர்க்கட்சிகள் தயாரில்லை.



இந்த வாரமும் இது குறித்து சஜித் பிரேமதாசவோடு ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க சஜித் அணி தயாராக இல்லை. ரணிலோடு இணைந்தால் அவர் தன்னுடைய அணியைக் விழுங்கி விடுவார் என்று சஜித் பயப்படுகிறார். வெளியில் இருந்து ஆதரவு தரலாம் என்று சில நாட்களுக்கு முன் நடந்த சந்திப்பில் கூறி இருக்கிறார். ஜேவிபியும் அவ்வாறு சர்வ கட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு தயார் இல்லை. தமிழ் கட்சிகளும் பெருமளவுக்கு ஒத்துழைக்கும் நிலையில் இல்லை.

எனவே ஒரு சர்வகட்சி அரசாங்கத்துக்கான வாய்ப்புக்கள் குறைவாகத் தான் தெரிகின்றன.மாறாக எதிர்த் தரப்பிலிருந்து தனக்கு ஆதரவான ஆட்களை கழட்டி எடுக்கும் வேலையை ரணில் செய்யலாம். அதை அவர் ஏற்கனவே தொடங்கி விட்டார். அது அவருக்குக் கைவந்த கலை. ஆனால் அவ்வாறு உருவாக்கப்படும் ஒரு அரசாங்கம் எதிர்க்கட்சிகளாலோ அல்லது மக்களாலோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்காது.

தாமரை மொட்டுக் கட்சியைப் பாதுகாக்க வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. ரணிலைப் பாதுகாக்க வேண்டிய தேவை தாமரை மொட்டுக்கு உண்டு. எனவே ஒருவர் மற்றவரில் தங்கியிருப்பார்கள். இது எதுவரை என்று சொன்னால், அடுத்த பெப்ரவரி மாதம் வரையிலும். ஏனெனில் அடுத்த பெப்ரவரி மாதத்தோடு யாப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ரணிலுக்கு கிடைத்து விடும். அவ்வாறு கிடைத்தால் அதற்குப் பின் நடக்கக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தாமரை மொட்டுக்கட்சி இப்பொழுது அனுபவிக்கும் பெரும்பான்மையைப் பெற முடியுமா என்பது சந்தேகமே. எனவே வரும் பெப்ரவரி மாதத்தோடு தனது பேரம் கீழிறங்கி விடும் என்று தாமரை மொட்டுக் கட்சிக்குத் தெரியும். தன்னுடைய பேரம் அதிகமாகி விடும் என்று ரணிலுக்கு தெரியும். எனவே அவர் திட்டமிட்டு காய்களை நகர்த்துகிறார்.

அடுத்த ஆறுமாத காலத்துக்குள் அவர் தன்னை பலப்படுத்த வேண்டும். யூ .என்.பியைப் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னால் சஜித் பிரேமதாசவை பலவீனப்படுத்த வேண்டும். ஒன்றில் அவரை வழிக்குக் கொண்டு வர வேண்டும். அல்லது தோற்கடிக்க வேண்டும். அடுத்த பெப்ரவரி மாதத்திற்கு பின்னரும் அவர் நாடாளுமன்றத்தை கலைப்பாரா என்பது சந்தேகம் தான். ஏனெனில் அடுத்த பெப்ரவரி மாதத்தின் பின் நாடாளுமன்றம் பெருமளவுக்கு அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தாமரை மொட்டின் பெரும்பான்மை பெருமளவு அவருக்கு கட்டுப்பட்டது ஆகிவிடும். அதன்பின் அவர் விரும்பியபடி காய்களை நகர்த்தலாம். இந்த இடைப்பட்ட கால கட்டத்திற்குள் அவர் உள்ளூராட்சி சபை தேர்தல்களையும் மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்தக்கூடும். தேர்தல் முடிவுகள் தாமரை மொட்டுக்கு பாதமாக அமையும். இப்பொழுது உள்ளூராட்சி மன்றங்கள் பெருமளவுக்கு தாமரை மொட்டின் கட்டுப்பாட்டுக்குள் தான் காணப்படுகின்றன. ஆனால் ஒரு புதிய தேர்தல் நடந்தால் தாமரை மொட்டு அந்த பலத்தை இழக்கக் கூடும். அதே போல மாகாண சபைகளுக்கான தேர்தலும் தாமரை மொட்டின் வீழ்ச்சியைக் காட்டக் கூடும். எனவே புதிய உள்ளூராட்சி மன்றங்களும் புதிய மாகாண சபைகளும் தமது பலவீனத்தை வெளிப்படுத்தலாம் என்ற அச்சம் தாமரை மொட்டுக்கு உண்டு.

அதனால் தான் நாடாளுமன்றம் அடுத்த பெப்ரவரி மாதத்தின் பின் கலைக்கப்படுவதை எப்படித் தடுக்கலாம் என்று தாமரை மொட்டுக் கட்சி சிந்திக்கின்றது. ரணில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் 22வது சட்டத் திருத்த வரைபில், 19வது திருத்தத்தில் உள்ளபடி நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பதற்கான கால எல்லையை நாலரை ஆண்டுகளாக மாற்றும் ஏற்பாடு இணைக்கப்படவில்லை. இருபதாவது திருத்தத்தில் உள்ளபடியே இரண்டரை ஆண்டுகளில் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்று உள்ளது. இது தாமரை மொட்டைத் தன் பிடிக்குள் வைத்திருப்பதற்கு ரணில் செய்யும் தந்திரம் என்று அக்கட்சி நம்புகிறது.

அதனால் தான் சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் கலைக்கபடும் காலத்தை 19இல் உள்ளது போல மாற்றுமாறு அண்மையில் ரணிலுக்கு கடிதம் கொடுத்திருந்தார்கள். அவர்களை சமாளிப்பதற்காக ரணில் இப்போதைக்கு பொது தேர்தல் இல்லை என்று அறிவித்திருக்கிறார்.

அவர்களை சமாளிப்பது என்பதைத் தவிர, வேறு ஒரு உள்நோக்கமும் அவரிடம் இருக்கலாம். பெப்ரவரி மாதத்தின் பின் ஒப்பிட்டுளவில் தனக்கு அதிகம் கட்டுப்படும் நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு, தன் எஞ்சிய ஆட்சிக் காலத்தை எப்படிக் கடக்கலாம், தனது சொந்த கட்சியை எப்படி மீள இணைக்கலாம் என்று அவர் திட்டமிடுவார்.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

ஒரு தேர்தல் நடந்தால் முடிவுகள் தாமரை மொட்டுக்குப் பாதகமாகவும் எதிர்கட்சிகளுக்குச் சாதகமாகவும் அமையக்கூடும். ஆனால் யு.என்.பிக்கு அது எப்படி அமையும் என்று இப்பொழுது கூறுவது கடினம். ஏனென்றால் யூ .என்.பி. இப்பொழுது இரண்டாக உடைந்து கிடக்கிறது. எனவே நாடாளுமன்ற தேர்தலை நடத்தினால் அது எதிரிகளுக்கு சாதகமாக அமையும் என்று ரணில் அஞ்சுகிறார். அதனால் அவர் நாடாளுமன்றத்தை கலைக்கவும் ஒரு புதிய தேர்தலை நடத்தவும் தயாராக இருக்க மாட்டார்.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு ரணிலுக்கும் விருப்பமில்லை. வரும் பெப்ரவரி மாதத்தின் பின் தாமரை மொட்டு கட்சியானது அவரில் தங்கி இருக்கும் நிலைமைகள் மேலும் அதிகரிக்கும். அந்த நிலையை அப்படியே பேணியபடி அவர் தன்னுடைய பதவிக் காலத்தை முடிப்பதற்கு இடையில் யு.என்.பியை எப்படிப் பலப்படுத்தலாம் என்று திட்டமிடலாம்.

எனவே சஜித்தை எப்படி வளைத்தெடுப்பது என்பதே அவர் முன் உள்ள சவால். சஜித்தை வளைத்து எடுத்தால் ரணிலுக்கு இரட்டை லாபம் உண்டு. அதன் மூலம் ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்கலாம். அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியத்துக்கு வெளிக்காட்டலாம்.

இரண்டாவது சஜித்தை தோற்கடித்து விட்டால் அல்லது சஜித்தை வழிக்கு கொண்டு வந்து விட்டால் யூ .என்.பி மீள இணைந்துவிடும். அதன் மூலம் அடுத்த நாடாளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல் போன்றவற்றில் ரணில் முன்னரை விடப் பலமாகக் காணப்படுவார். எனவே இப்பொழுது ரணிலுக்கு உள்ள சவால், சஜித்தை எப்படி வளைப்பது என்பது தான். ஒரு புதிய தேர்தலுக்குப் போக அவர் தயாரில்லை.

ஏனெனில், ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார கேட்பது போல 134 எம்பிக்களா? அல்லது மக்களா? என்ற கேள்விக்கு விடை கிடைக்கக்கூடிய ஒரு தேர்தலை நடத்த அவர் துணிய மாட்டார்?

# எங்கே செல்வார் ரணில்?

(18ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை விடுத்திருந்த போதும், அது இறுதி செய்யப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாட்டுக்குப் பின்னரே, உதவி வழங்கல் குறித்து முடிவெடுக்க ஜப்பான் திட்டமிட்டிருக்கிறது.

இந்தநிலையில், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் தோன்றியிருக்கின்ற நெருக்கடிகளை தீர்த்து, அதனுடன் மீண்டும் உறவுகளைப் பலப்படுத்த அரசாங்கம் விரும்புகிறது.

ஜப்பானின் முதலீட்டில் கொழும்பில் இலகு ரயில் திட்டத்தை முன்னெடுக்க செய்து கொண்ட உடன்பாட்டை இரத்து செய்ததன் மூலம், கோட்டாபய ராஜபக்ஷ ஜப்பானுடனான உறவுகளை கெடுத்துக் கொண்டார். தற்போதைய அரசாங்கம் ஜப்பானுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது முக்கியமான தேவையாக உள்ளது. அபேயின் இறுதிச் சடங்கிற்குப் பின்னர் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்து பேச்சுக்களை ரணில் திட்டமிட்டிருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க இப்போது எந்த நாட்டுக்குச் செல்கிறார் என்பதை விட எவ்வாறு நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் போகிறார் என்பதே முக்கியமானது.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்:- சர்வதேசமும் இலங்கை அரசாங்கமும்!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து
– பவித்திரன் –

சமூகம் ஒன்றை அச்சுறுத்திப் பணிய வைப்பதற்கான ஒரு உபாயமாகவே வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக ஏற்படுத்தப்படும் பாதுகாப்பற்ற மனநிலை உறவுகளை மட்டும் பாதிப்பதாக அமையாது. அவர்கள் சார்ந்த சமூகம் முழுவதையுமே இது பாதிக்கும்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஒரு உலகளாவிய பிரச்சினையாகியிருக்கிறது. இது உலகின் ஒரு பகுதியில் மட்டும் பாதிப்பை ஏற்படுத்திய ஒரு பிரச்சினையல்ல. இப்போது உள்நாட்டு விவகாரங்களில் கூட இராணுவ ஆட்சியாளாளர்களால் காணாமல் ஆக்கப்படுதல் என்பது பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக அரசியல் எதிராளிகளை ஒடுக்குவதற்கு இது ஒரு உபாயமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மனித உரிமைகளுக்காக போராடுபவர்கள் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் சாட்சிகள் காணாமல் ஆக்கப்படுதல் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள். பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கும் படைத்தரப்பினர் தமது பணிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இதனைப் பயன்படுத்துகின்றார்கள். இருந்த போதிலும் இவ்வாறான குற்றங்களில் சம்பந்தப்பட்டவா்கள் தண்டனைகளிலிருந்து எப்போதும் தப்பித்துக் கொள்கின்றாரகள்.

முதலாவது உலகப்போரின் பின்னர் இவ்வாறு பெருந் தொகையானவர்கள் பல்வேறு நாடுகளிலும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். ஐ.நா.வின் அறிக்கை ஒன்றின்படி 85 நாடுகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றன. உள்நாட்டுப் போர்களின் போது தான் இவ்வாறான சம்பவங்கள் பெருமளவுக்கு இடம்பெற்றுள்ளன.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தடைசெய்யப்பட்ட ஒன்றாக இருக்கின்ற போதிலும் உலகம் முழுவதிலும் அடக்குமுறைக்கான ஒரு வழிமுறையாகவும் எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்கான உபாயமாகவும் இதனைப் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கான ஒரு உபாயம் எனச் சொல்லிக் கொண்டு இதனை அரசாங்கங்கள் பயன்படுத்துகின்ற போதிலும் கூட சட்டத்தரணிகள் சாட்சிகள் அரசியல் எதிராளிகள்இ மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்கள் போன்றவர்கள் தான் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். இவர்களுடைய உயிர்கள் தான் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றது.

இந்தப் பின்னணியில் தான் ஐ.நா. பொதுச் சபை 2010 டிசெம்பர் 21 ஆம் திகதி நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றின்படி ஓகஸ்ட் 30 ஆம் திகதியை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாக (**the International Day of the Victims of Enforced Disap pearances**) பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தவகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட ஒரு நாடாக இலங்கை உள்ளது. சிரியாவுக்கு அடுத்ததாக அதிகளவுக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கொண்ட நாடாக இன்று இலங்கை உள்ளது.

1980களுக்குப் பின்னர் சுமார் 60 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையிலானவர்கள் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதை புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில் இறுதிப்போரின் போது தான் பெருமளவுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவா்களின் தொகை காணப்படுகின்றது. இது தொடா்பாக பல்வேறு ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்



பட்டன. சர்வதேசத்தை சமாளிப்பதற்கான ஒரு உபாயமாகத ்தான் இவ்வாறான விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும் கூட சுமார் 25000 பேர் வரையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பது இந்த விசாரணைகளின் போது வழங்கப்பட்ட சாட்சியங்களின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது.

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவா்களின் உறவுகளினால் முன்னெடுக்கப்படும் போராட்டம் இரண்டாயிரம் நாள்களைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இந்தப் போராட்டம் குறித்து வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவி கலாரஞ்சனியிடம் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு இன அழிப்பும் கொடூர யுத்தமும் நடைபெற்ற பிற்பாடு கையளித்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி நாங்கள் தெரு ஓரங்களில் எமது உணர்வுபூர்வமான ஏக்கங்களுடன் போராடிக் கொண்டிரு க்கிறம். இலங்கை அரசாங்கம் எமக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்பதில் நம்பிக்கை இழந்த நிலையில் தான் சர்வ தேசத்திடம் நீதியைக் கேட்டு நிற்கிறம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36 ஆவது கூட்டத் தொடரில் இருந்து இன்று வரை எமது உண்மை நிலையை நாம் ஐ.நா. முற்றத்தில் எடுத்து உரைத்துக் கொண்டிருக்கின்றோம். சர்வதேசத்தின் மூலமான ஒரு நீதியைத் தான் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம். ஆனால் இதுவரையில் எமக்கு சாதகமான முன்னேற்றம் எதுவும் இடம் பெற்றதாக இல்லை. அனைத்து நாடுகளும் ஐ.நா.வில் எமக்கு சாதகமான ஒரு நியாயத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்பது தான் எமது கோரிக்கை என அவர் தெரிவிக்கின்றனர்.

இந்தப் போராட்டம் இவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்த்தீர்களா? என அவரிடம் கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு –

இந்த கொடூர இனஅழிப்பு நடைபெற்ற பிற்பாடு எமது உறவுகளைத் தேடி தெருவில் நின்றோம். ஆனால் 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் நீதி கிடைக்குமா என்ற ஒரு கேள்வி எமது உறவுகள் மத்தியில் தோன்றியது. இதனால் தான் 2017 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி இந்தப் போராட்டத்தை நாம் கைகளில் எடுத்து ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி அதனூடாக இன்று வரை நாம் எமது உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என நினைக்கவில்லை. போர் முடிந்த பின்னர் புத்தரின் வழியில் வந்த இந்த அரசாங்கம் எமது பிள்ளைகளைக் கொண்றிருக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கயுடன் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது பிள்ளைகளைத் திருப்பி ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் தான் அவர்களிடம் நாம் பிள்ளைகளை ஒப்படைத்திருந்தோம். ஆனால் கைகளில் ஒப்படைத்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதைச் சொல்லக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை.

இனஅழிப்பைச் செய்த இந்த அரசாங்கங்களிடமிருந்து எம்மால் நீதியை எதிர்பார்க்க முடியாது. ஆட்சி மாறியிருந்தாலும் கூட அவர்களிடமிருந்து எமக்கு ஒருபோதும் நீதி கிடைக்கப் போவதில்லை. சர்வதேசம் தான் எமக்கு நீதியைப் பெற்றுத் தந்து – ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும் வழிவிட வேண்டும் என்பதுதான் இந்தத் தாய்மாரின் கோரிக்கை என அவா் தெரிவிக்கின்றார்கள்.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இராணுவப் புலனாய்வாளர்கள் இவர்களைப் பின்தொடர்கின்றார்கள். இதற்கு மத்தியில் தான் இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள். உயிர்களுக்கும் மேலான உண்மையைக் கண்டறிவதற்காக நாம் இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை இந்த அரசாங்கத்தினால் சொல்ல முடியாது. ஆனால் சர்வதேசம் அதனைச் சொல்ல வைக்க வேண்டும். கையளிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை சர்வதேசத்தின் மூலமாக வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அரசாங்கத்தை நிறுத்தி நீதியைப் பெற்றுக் கொள்வதற்காகத் தான் இந்தப் போராட்டத்தை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றோம் என்பது இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களின் ஏகோபித்த குரலாக ஒலிக்கின்றது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் செப்டம்பரில் ஆரம்பமாகஉள்ளது. இந்த நிலையில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை இங்கு முக்கிய இடத்தைப் பெறலாம். பொறுப்புக் கூறலுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் பல ஆண்டுகளாக காலத்தைக் கடத்துவதற்கான உபாயமாகத் தான் அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது. இம்முறை தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து ஒருமித்த குரலில் பேசினால் எதனையாவது சாதிக்க முடியும் அதனை அவர்கள் செய்வார்களா?

## உங்களைப் பார்த்தால் வெறுப்பாக இருக்கிறது! அமெரிக்காவில் இந்தியப் பெண்கள் மீது தாக்குதல்

(6ம் பக்கத் தொடர்ச்சி) அமெரிக்காவுக்கு வந்து விடுகின்றனர். நான் எங்கு சென்றாலும் இந்தியர்கள் இருக்கின்றனர். உங்கள் இந்தியாவில் வாழ்வது சிறப்பானது என்றால் ஏன் நீங்கள் எல்லோரும் இங்கே வருகிறீர்கள். நீங்கள் எல்லோரும் இந்தியாவுக்கே திரும்பிப் போங்கள் எனக் கூச்சலிடுகிறார்.

திடீரென அவர் இந்திய பெண்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டார். அதில் ஒரு பெண்ணுக்கு முகத்தில் படுகாயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், குறித்த பெண் அவர் களை பேசியதையும் இந்திய பெண்கள் தாக்கப்பட்டதையும் ஒருவர் காணொளியில் பதிவு செய்துள்ளார். 5 நிமிட அந்த காணொளி வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து தாக்குதல் நடத்திய பெண் கைது செய்யப்பட்டார். அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. விசாரணையில் அவர் மெக்சிகோவை சேர்ந்த பெண் என்று தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சோவியத் ஒன்றியத்தின் கடைசித் தலைவர் மிகையீல் கோர்பச்சேவ் காலமானார்!

(5ம் பக்கத் தொடர்ச்சி) புரட்சிக்கும், தியாகத்திற்கும் உதாரணமாக திகழ்ந்தவர் சேகுவேரா. கியூ பாவை சேர்ந்த சேகுவேரா புரட்சியாளர், வைத்தியர், அரசியல் வாதி, இலக்கியவாதி என பன்முகத்தன்மை கொண்ட வர். சேகுவேராவின் இளைய மகன் கமீலோ சேகுவேரா. இவர் சேகுவேரா ஆய்வு மையத்தின் இயக்குனராக பணி புரிந்து வந்தார்.

இந்நிலையில் கமீலோ சேகுவேரா வெனிசூ லா நாட்டின் சராகவ் நகருக்கு சென்ற போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்தார். உயிரிழக்கும் போது அவருக்கு வயது 60 ஆகும். கமீலோ சேகுவேராவின் மறைவுக்கு கியூபாவின ஜனாதி பதி இரங்கல் தெரிவித்து டுவிட்டர் பதிவு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கை அரகலய போராட்டம் தோல்வியில் முடிந்து விட்டதா?

**Go Home Gota** அல்லது அரகலயவின் இன்றைய நிலை என்ன? இதனுடைய நாளைய பயணம் எப்படியாக இருக்கப் போகிறது? ஏனிந்தக் கேள்வி எழுகிறது என்றால், இந்தப் போராட்டத்தை ஆரம் பித்ததற்கான நோக்கம் அல்லது இலக்கு இன்னும் எட்டப்படவில்லை. அதாவது இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் பகிரங்கமாக முன் வைத்த அடிப்படை யான விடயங்கள் எதுவும் நிறை வேற்றப்படவில்லை.

அதேவேளை இந்தப் போராட்டமானது, தற்போதைய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினால் மட்டுறுத்தப்பட்டி ருக்கிறது. போராட்டத்தின் இயங்கு விசைகளாக இருந்த முக்கியச் செயற் பாட்டாளர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுகின்றனர். அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் தலைவரான வசந்த முதலிகமே உட்படச் சிலர் நீண்ட காலச் சிறைத் தடுப்புக்குட் படுத்தப் பட்டுள்ளனர்.

அவர்கள் மீது அவசரகாலச் சட்டத்தி ற்குட்பட்ட முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. மட்டுமல்ல, இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் பயங்கர வாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அரச தரப்பினர் வெளிப்படை யாகவே குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஆனால் கடந்த ஜீலை மாத முற்பகுதி யில் இவர்கள் (அரச தரப்பினர்) எல்லாம் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர். இப்பொழுது வெளியே வந்து குற்றம் சாட்டுகின்றனர் என்றால் அந்தளவுக்கு நிலைமை மாறியுள்ளது. பலவீனப்பட்டி ருந்த அரச தரப்புப் பலமடைந்து வரு கிறது. பலமாக இருந்த போராட்டத் தரப்பு பலவீனப்பட்டுள்ளது என்பதே அர்த்தாகும்.

போராட்டத்தரப்பினர் மீது சுமத்தப்பட்டு ள்ள முக்கியமான குற்றச்சாட்டுகள் —

1.ஜனாதிபதி மாளிகை உள்பட அரச சொத்துகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளின் வீடுகளுக்கும் தீயிட்டது, சேதப்படுத்தி யது.

2.ஒரு கட்டத்தில் படையினரைத் தாக்கி அவர்களுடைய ஆயுதத்தையும் பறித்துச் சென்றுள்ளனர்.

3.போராட்டக்காரர்களின் மையமாக இருந்த காலிமுகத்திடல் **Go Home Gota** குடியிருப்பில் கஞ்சாச் செடிகள் வளர்க் கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத் தும் விதமாக பொலிசாரினால் வெளி யிடப்பட்ட சில காட்சிகள்.

4.போராட்டக்காரர்களில் பெரும்பாலா னோர் தூள் மற்றும் போதைப் பொருட் பாவனையாளர்கள்.

5.போராட்டக்காரர்களில் சிலருடைய வங்கிக் கணக்குகளுக்கு அதிகளவு நிதி அளிக்கப்பட்டுள்ளது. இது இவர்கள் பிற சக்திகளின் தூண்டலினால் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மையை உறுதிப்படுத்துகிறது என்பது.

6. போராட்டத் தரப்பினருடைய ஜன நாயக உரிமைகளை படைத்தரப்பும் அரசாங்கமும் மதித்த போதும் அதை மீறி, வன்முறைச் சம்பவங்களில் அவர் கள் ஈடுபட்டனர் என்பது.

7. மக்களைத் தவறான வழியில் பயன்படு த்தி (திசை திருப்பி) அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சூழ்ச்சியில் ஈடுபட்ட னர்.

8. ஜனாதிபதி மாளிகையில் உள்ள நீச்சற் தடாகத்தில் சவர்க்காரம் போட்டுக் குளித்த காட்சியை பரப்பியதன் மூலமாக இலங்கையின் மரியாதையைக் கப்பலே ற்றி விட்டனர். (இது குறித்து பாது காப்புச் செயலர் கமால் குணரட்ண அதிகளவு கவலைப்பட்டுள்ளார். ஆனால் வன்னியில் நடந்த இறுதிப்போரின் போதும் போர் முடிந்த பிறகும் நடந்த மனிதப் பேரவல நிலையைக் குறித்து அவர் பெருமிதப்படுகிறார் போலும்). இப்படி ஏராளம் குற்றச்சாட்டுகள்.

ஆக மொத்தத்தில் அரகலயவினர் (**Go Home Gota**) மீது அரச தரப்பினர் முழு க்குற்றச் சாட்டையும் சுமத்தியுள்ளனர்.

இவ்வாறு குற்றச்சாட்டைச் சுமத்தியிரு ப்பதன் மூலம் போராட்டக்காரர்களைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை மக்களின் மனதில் நாசுக்காகப் பதிய வைக்கிறார் கள். அதோடு இந்தக் குற்றவாளிகள் மிக ஆபத்தானவர்கள். இவர்கள் மிக மோச மான பழக்கவழக்கங்களைக் கொண்ட வர்கள். இவர்களுக்குப் பின்னணியில் பல தீய சக்திகள் இருக்கின்றன. அந்தச் சக்திகளின் பின்னணியில் தான் இவர்கள் இயங்குகின்றனர்.

ஆகவே இவர்களை நீங்கள் நம்பக் கூடாது. இவர்களுடைய கதைகளுக்கு எடுபடவோ இவர்களுக்கு ஆதரவளிக் கவோ கூடாது என்ற எச்சரிக்கை உணர்வையும் மக்களிடத்திலே ஏற்படு த்தி விடுகிறார்கள். அதிகாரத் தரப்புக்கு ஒரு சிறிய வாய்ப்புக் கிடைத்தால்



போதும். அது தன்னை மிகக் கெட்டி யாகப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சித்து விடும். அதேவேளை தன்னை எதிர்க்கும் தரப்பை அப்படியே சட்டங்களாலும் படை மற்றும் பொலிஸ், நீதி மன்றம், சட்டம் ஆகியவற்றின் மூலமாக ஒடுக்கி விடும். இப்பொழுது நடந்து கொண்டிருப்பது இதுதான். இந்தக் குற்றச் சாட்டுகளிலிருந்து புழ ர்ழஅந புழவய தரப்பினர் எப்படித் தம்மை விடுவித்துக் கொள்ளப் போகின்றனர்? அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகின்றனர்? இவர்கள் முன்னி றுத்த கோரிக்கைகள் என்ன நிலைக் குள்ளாகப் போகின்றன? அந்தக் கோரிக்கைகளை மக்கள் முன்னெடு த்துச் செல்வார்களா? அந்தக் கோரி க்கைகளில் அரசு எவற்றை ஏற்றுக் கொள்ளும்? எந்த அளவுக்கு ஆட்சியில் மாற்றங்களைச் செய்யும்? என்ற பல கேள்விகள் எழுகின்றன.

இதேவேளை சமகாலத்தில் இவர்களு டைய போராட்டக்களமான காலி முகத் திடலையும் அரசாங்கம் மீளக் கைப் பற்றி, இவர்களை அங்கிருந்து வெளி யேற்றி விட்டுள்ளது. அந்தப் பகுதி கொழும்பு மாநகர சபைக்குரியது என்ப தால் அங்கே ஏற்படுத்தப்பட்ட பாதிப்பு களுக்கான நட்ட ஈட்டையும் போரா ட்டத் தரப்பினர் அரசுக்குச் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் சட்டத்தை முன்னிறு த்தியே மேற்கொள்ளப்படும் நடவடிக்கை களாகும்.

ஆனால் உண்மையில் இது பகிரங்க மான அரசியற் பழிவாங்கலே.

எத்தகைய போராட்டத்தையும் அதிலு ள்ள நியாயங்களைக் கவனித்து, அவற் றுக்குப் பரிகாரம் காண்பதற்கு முன்பு, அதிகாரத் தரப்பு சட்டத்தின் மூல மாகவே அதை அடக்க முற்படுவது ண்டு. அதற்கேற்பவே சட்டமும் உள் ளது. சட்டம் என்பதே அதிகாரத் தரப்பைப் பாதுகாப்பதற்கான ஒரு ஏற்பாடு தான். அதைப் பயன்படுத்தி ரணில் அரசாங்கம் மக்களைக் கட்டுப் படுத்த முற்படுகிறது. இதன் மூலம் தன்னைச் சுற்றியிருந்த எதிர்ப்பு வளை யத்தை அது முதற்கட்டமாக இல்லாமற் செய்துள்ளது. அல்லது பலவீனப் படுத்தியுள்ளது.

இது எதிர்பார்க்கப்பட்ட சில பதில்களை யும் மிகச் சிக்கலான ஒரு நிலையையும் கொண்ட விடயமாகும்.

முதலில் இந்தப் போராட்டம் ஆரம் பிக்கப்பட்ட போது இது தொடர்பாகப் பல கேள்விகள் எழுந்தன. இந்தப் போராட்டத்தை முன்னெடுப்போர் யார்? எந்த அடிப்படையில் இதனை முன்னெ டுக்கின்றனர்? இது இயல்பான தோற்றப் பாட்டின் விளைவா? அல்லது இதற்கு ஏதாவது பின்னணிச் சக்திகள் உண்டா? அப்படியென்றால் அவை எவை? அவற்றின் நோக்கம் — தேவை என்ன? அவை எந்தளவுக்கு இந்தப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளும். அல்லது விட்டுப் பிடிக்கும்? இதன் தொடர்ச்சி எப்படி அமையும்? இதற்கு அரசாங்கத்தின் எதிர்வினைகள் எப்படி யாக இருக்கும்? அதை எப்படிப் போராட்டத்தரப்பினர் எதிர்கொள்வர்?

இந்த மாதிரிக் கேள்விகள் பல அப் போதே பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டதுண்டு. இதற்கான பதிலாக பல்வேறு விதமான தகவல்களும் கருத்துகளும் சமூக வலைத்தளங்களி லும் பிற இடங்களிலும் சொல்லப் பட்டது உண்டு. மட்டுமல்ல இதை யொட்டிப் பல வாதங்கள் நடந்துமிரு ந்தன.

இன்று இப்படியான வாதங்களுக்கு ஏறக்குறைய பதில் கிடைத்த மாதிரியான ஒரு நிலை வந்துள்ளது.

1.இந்தப் போராட்டத்தை முன்னெடுக் கும் போதிருந்த உற்சாகமும் மக்களி டையே ஏற்பட்ட ஈர்ப்பும் மக்கள் ஆதரவும் இன்று குறைந்துள்ளது. அல்லது இல்லாமற் போயுள்ளது.

2.இந்தப் போராட்டத்தைப் பற்றி அரசாங்கம் சொல்கின்ற விடயங்களை அப்படியே நம்பாது விட்டாலும் அதைப் புறக்கணிக்கும் நிலையில் மக்களில் பெரும்பகுதியினர் இல்லை.

3.போராட்டத் தரப்பினரிடையே (முக்கிய மான செயற்பாட்டாளர்களைக் கைது செய்தல்) நடக்கும் களையெடுப்பை எதிர்க்கக் கூடிய அளவுக்கு மக்கள் துணியவில்லை. முன்வரவும் இல்லை. அதை ஒழுங்குபடுத்தும் அளவில் ஏனைய இரண்டாம் நிலைச் செயற் பாட்டாளர்கள் இல்லை.

4.போராட்டத்தை முன்னெடுப்போர் அதன் வழிப்படத்தைச் சரியான முறை யில் தீட்டவில்லை. இதனால் அடுத்த கட்டம் என்ன? அதிகாரம் தன்னுடைய கை வரிசையைக் காண்பித்தால் அதை எப்படி எதிர் கொள்வது என்பதைக் குறித்து எத்தகைய தெளிவும் இல்லா திருந்துள்ளனர். இதனால் மிக இலகு வாக ஒவ்வொருவரையும் தனிமைப்படு த்தித் தனித் தனியாகக் கைது செய்து சட்ட நடவடிக்கைக்குட்படுத்துகிறது அரசாங்கம். இதை எதிர்க்கக் கூடிய நிலையில் போராட்டத்தரப்பு இல்லை என்பது அதனுடைய அப்பட்டமான பலவீனமாகி விட்டது.

5. கடந்த ஜீன், ஜஜீலையில் மிகப் பெரிய ஆற்றல் மிக்க சக்தியாக விளங்கி, அரசாங்கத்தையே ஆட்டம் காண

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



வைத்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியையே நாட்டை விட்டுத் தப்பியோட வைத்த போராட்டமானது அடுத்த ஒரு மாதத்தில் சிறைக் கூடத் துக்குள் சிக்குப்பட வேண்டியிருப்பது ஏன்?

6.போராட்டத்திற்கு சரியான வழிப்பட மும் நீண்டகாலத் திட்டமும் தலைமை த்துவமும் இல்லை என்று சொல்லப் பட்ட விமர்சனங்களையும் இதைக் குறித்து முன் வைக்கப்பட்ட அறிவுறு த்தல்களையும் போராட்டத்தரப்பினர் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை? அதன் விளைவை மெய்மையை இன்று உணரக்கூடியதாக உள்ளதல்லவா!

7.இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோரி டம் மெய்யான அர்பணிப்புணர்வும் செயற்பாட்டு வேகமும் மாற்றத்தை விரும்பும் மனப்பாங்கும் இருந்தது. ஆனால் அதை உள் வெளிச்சக்திகள் பயன்படுத்த விளைந்தன என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக பிராந்திய, மேற்குலக சக்திகள். இப்பொழுது அவற்றின் நோக்கம் தேவை (அவை விரும்பிய எல்லைகள், இலக்குகள்) நிறைவேறியபின் மெல்ல இதிலிருந்து பின்வாங்கி விட்டன. இதைக்குறித்த புரிதல் ஏற்பட்டுள்ளதா?

8.உண்மையில் எதிர்பார்க்கப்பட்டது ஆட்சி மாற்றம். அதாவது ஆட்சிக் கட்டமைப்பு மாற்றம். மக்கள் நலனை மையப்படுத்திச் செயற்படக் கூடிய ஒரு அரசுக் கட்டமைப்பும் ஆட்சியுமே யாகும். அதற்குப் பொருத்தமான தலைமை வேண்டும். மக்கள் விரோத குடும்ப ஆட்சி, தனி நபர் அதிகாரம், ஊழல் தரப்புகள் போன்றவை வேண் டாம் என்றே வலியுறுத்தப்பட்டன. இதிலே ஆள் மாற்றங்கள் நடந்திருக் கின்றனவே தவிர, கட்டமைப்பு மாற் றமோ ஆட்சித் தன்மையில் வேறு பாடுகளோ நிகழவில்லையே!

9.இப்பொழுது நடந்துள்ள தலைமை த்துவ மாற்றம் முன்னர் இருந்ததை விட எந்த விதத்தில் மேலானது? நாட்டுக்கும் மக்களுக்கும் இதனால் உண்டாகப் போகும் நன்மை தீமை களைக் குறித்த சரியான ஒழுங்குபடு த்தப்பட்ட உரையாடல்களும் அவதான ங்களும் நிகழ்கின்றனவா? தவறான வழியில் செல்வதாக இருந்தால் இதை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்கான தரப்புகள் சக்திகள் ஏதுமுண்டா? ஏனெனில் எதிர்க்கட்சிகள் எல்லாமே பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அப்பால் எத்தகையை அரசியல் விளைவுகளையும் உண்டாக்கக் கூடிய திறனுடன் இல்லாதிருக்கின்றன. இந்தச் சூழலில் அரசுக்குக் கடிவாளத்தைப் பூட்டுவது யார்? எந்தத் தரப்பு?

(22ம் பக்கம் பார்க்க)

# எங்கே செல்வார் ரணில்?

சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் அரசாங்க இறுதிச் சடங்கு, வரும் செப்டெம்பர் 27ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கத் திட்டமிட்டிருக்கிறார்

பொருளாதார நெருக்கடிகளை அடுத்து இலங்கையில் 12திட்டங்களை ஜப்பான் இடைநிறுத்தி வைத்திருக்கிற நிலையில் அதனிடம், 3.5பில்லியன் டொலர் கள் உதவிக் கோரிக்கையை இலங்கை விடுத்திருந்த போதும், அது இறுதி செய்யப்படவில்லை''

இலங்கையில் அரச தலைவர்களாகப் பதவியேற்றுக் கொள்பவர்கள் முதலில் இந்தியாவுக்கும், அடுத்து சீனாவுக்கும் அதிகாரபூர்வ பயணங்களை மேற்கொள்வது வழக்கம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவ்வாறு தான் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த்தபடி, சீனாவுக்கு தனது இரண்டாவது பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை. கொரோனா தொற்றும், அதனையடுத்து காணப்பட்ட அரசியல், பொருளாதார சூழல்களும், சீனாவுக்கு நெருக்கமானவர் என்று கூறப்பட்ட போதும், கோட்டாபய ராஜபக்ஷ அரச விருந்தினராக பீஜிங்கில் காலடி எடுத்து வைக்கும் வாய்ப்பை கொடுத்திருக்கவில்லை.



கோட்டாபய ராஜபக்ஷ தனது இரண்டரை ஆண்டு பதவிக்காலத்தில் தவறவிட்ட எத்தனையோ வாய்ப்புகளில் இதுவும் ஒன்று.

இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள நிலையில் அவரது முதல் அதிகாரபூர்வ வெளிநாட்டுப் பயணம் எந்த நாட்டுக்கு இடம் பெறப் போகிறது என்ற கேள்வி பரவலாக காணப்படுகிறது.

மரபுகளுக்கு அமைவாக அவர், புதுடில்லிக்குத் தான் முதல் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். பதவியேற்று ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும், இன்னமும் அவ்வாறான பயணத்துக்கான முன்முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

இந்தியாவிடம் இருந்து அதிகாரபூர்வ அழைப்பு வர வேண்டும். அதனை ஏற்றுக் கொண்டு ஜனாதிபதி புதுடில்லி செல்ல வேண்டும்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வாரம் கழித்தே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இருந்து, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த வாழ்த்துச் செய்தியில் எங்கள் மக்களின் பரஸ்பர நலனுக்காக உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிட்டிருந்த பிரதமர் மோடி ரணில் விக்கிரமசிங்கவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு எதையும் விடுக்கவில்லை.

அதேவேளை இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புது டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனவே, ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியத் தலைவர்களிடம் இருந்து புதிய அழைப்பு வந்தால் தான் அதனை ஏற்று அவர் அங்கு செல்ல முடியும்.

ஆனால் இப்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புது டில்லி அழைப்பு விடுக்கும் சூழல் இருப்பதாக தெரியவில்லை.

சீனாவின் ஏவுகணை மற்றும் செய்மதி வழித்தடக் கண்காணிப்புக் கப்பலான. யுவான் வாங்-5 விவகாரத்தில், இந்தியாவின் நலன்களையோ கரிசனைகளையோ ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கவனத்தில் கொள்ளாத நிலையில், அவரது புது டில்லிப் பயணம் என்பது உடனடிச் சாத்தியமானதொன்றாக இருக்குமா என்பது சந்தேகம்.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியவர் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தான். அதையடுத்து, ரஷ்ய ஜனாதிபதி புடினும், அதன் பின்னரே இந்தியப் பிரதமர் மோடியும், வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

ராஜபக்ஷவினரின் தயவுடன் ஆட்சிக்கு வந்திருப்பதால் தான், ரணிலுக்கு சீனா முந்திக் கொண்டு வாழ்த்து தெரிவித்தது என்று கருத்து காணப்பட்டது.

யுவான் வாங் கப்பல் விவகாரத்தில், அதற்கான நன்றிக்கடனை ரணில் விக்கிரமசிங்க செலுத்தியிருக்கிறார். இவ்வாறான நிலையில், ரணில் விக்கிரமசிங்க அடுத்து சீனாவுக்குத் தான் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் புது டில்லிக்குச் செல்லாமல், முதலில் சீனாவுக்குச் சென்றால், அது ரணில் விக்கிரமசிங்கவை நெருக்கடிக்குள்ளாக்கும்.

சீனாவின் செல்லப்பிள்ளையாக கருதப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவே, இரண்டரை ஆண்டுகளில் சீனாவின் பக்கம் செல்லாத போது, ரணில் விக்கிரமசிங்க முதல் பயணத்தை பீஜிங்கிற்கு மேற் கொண்டால் அது சர்ச்சையைக் கிளப்புவது நிச்சயம்.

சீனாவின் உதவியும், அனுசரணையும் இலங்கைக்கு இப்போது தேவைப்படுகின்ற போதும், சீனாவை மட்டும் நம்பியிருக்க முடியாத நிலையில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இருக்கிறது. ஏனைய சர்வதேசப் பங்காளிகளின் உதவியுடன் தான் நெருக்கடியில் இரு ந்து மீள முடியும் என்பதால், சீனாவை மட்டும் கவனத்தில் கொண்டு முடிவு களை எடுக்க முடியாமல் இருக்கிறது அரசாங்கம்.

யுவான் வாங் கப்பல் விவகாரம், இந்திய, மற்றும் அமெரிக்க தரப்புகளுக்கு, சினத்தை ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில், அதனை மேலும் ஆழப்படுத்தும் வகையில் ரணில் விக்கிரமசிங்க பீஜிங்கிற்கு செல்ல முற்படமாட்டார். இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் இரண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற் கொள்வதற்கான சாத்தியங்கள் அல்லது வாய்ப்புகள் உள்ளன.

ஒன்று அமெரிக்காவுக்கானது. இன்னொன்று ஜப்பானுக்கானது. ஐ.நா. பொதுச்சபையின் 77ஆவது அமர்வு வரும் செப்டெம்பர் 20ஆம் திகதி தொடங்குகிறது. அந்த அமர்வின் பொது விவாதத்தில், ஐ.நா.உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உரையாற்றுவது வழமை.

கடந்த ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். இந்தமுறை ரணில் விக்கிரமசிங்க அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு நியூயோர்க் செல்ல முடியும்.


அங்கு உலகத் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கும். ஆனால், இது வரையில் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க பயணத்துக்குத் திட்டமிடவில்லை. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை அனுப்பி வைக்கும் திட்டத்திலேயே இருப்பதாக கூறப்படுகிறது. அடுத்து, ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்குச் செல்வதற்கு ஒரு வாய்ப்பு அடுத்த மாத இறுதியில் கிடைத்துள்ளது.

கடந்த ஜீலை 8ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் அரசாங்க இறுதிச் சடங்கு, வரும் செப் டெம்பர் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

டோக்கியோவில் விளையாட்டுகள் மற்றும் நிகழ்வுகள் இடம் பெறும் மிகப் பெரிய அரங்கான, நிப்பொன் புடோகனில் நடைபெறவுள்ள இந்த அரசாங்க இறுதிச் சடங்கில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஷின்சோ அபேயின் இறுதிச்சடங்கு, தனிப்பட்ட குடும்ப நிகழ்வாக டோக்கியோவில் இடம் பெற்றிருந்தது. முன்னாள் ஜப்பானியப் பிரதமர் ஒருவருக்கு அரச இறுதிச்சடங்கு, 1967ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக நடைபெறவுள்ளது.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



இதில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கத் திட்டமிட்டிருக்கிறார். ஷின்சோ அபே, ராஜபக்ஷவினருடன் மாத்திரமன்றி ரணில் விக்கிரமசிங்கவுடனும் கூட நெருக்கமாக இருந்தவர்.

அவரது இறுதிச்சடங்கிற்காக ரணில் விக்கிரமசிங்க முதல் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வது யாருக்கும் வலியை ஏற்படுத்தாது. சர்ச்சை யாகவும் இருக்காது.

அதேவேளை சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தும். தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை அடுத்து இலங்கையில் 12திட்டங்களை ஜப்பான் இடைநிறுத்தி வைத்திருக்கிறது. ஜப்பானிடம், 3.5பில்லியன் டொலர்கள் உதவிக் கோரிக்கையை

(15ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஒன்ராறியோ மாநில சட்டசபையில் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு அரச கௌரவம்

ஒன்ராறியோ மாநில சட்டசபை உறுப்பினர் திரு லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டில் ஏற்பாட்டில் ஒன்டாரியோ மாகாண சட்ட சபையில் இசை புயல் எ. ஆர். ரஹ்மான் அவர்களுக்கு அரச கௌரவம் அளிக்கப் பட்டது.



கடந்த வாரம் கனடாவிற்கான இசைப் பயணம் மேற்கொண்டு வருகை தந்த இசைத்துறையில் இமாலய சாதனைகள் படைத்த இசைபுயல் எ. ஆர். ரஹ்மான் அவர்களுக்கு திங்கள் கிழமை 29ம் திகதி ஒன்ட்டாரியோ பாரரள மன்றத்தில் சமூக மற்றும் சமூகசேவைகள் பிள்ளைகள் சமந்தமான அமைச்சின் பாராளமன்ற உதவியாளரும் (PA to the Ministry of Children, Community and Social services) மார்க்ஹம் தொர்ந்ஹில் பாராளமன்ற உறுப்பினருமாகிய திரு லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டில் சிறப்பான அரச கௌரவம் அளிக்கப்பட்டது.

இதன் பொழுது Minister Michel Douglas Ford MPP (Minister of citizenship and multiculturalism) அவர்கள் ஏ ஆர் ரஹ்மான் அவர்களுக்கு ஒண்டாரியோ அரசின் வாழ்த்து மடலை வழங்கி கௌரவித்தார்.

இதனை தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக ஒன்ட்டாரியோ முதல்வர் Dough Ford அவர்களுக்கு MPP Logan Kanapathi அவர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட எ.ஆர்.ரஹ்மான் அவர்களை முதல்வர் தனது உத்தியோக பூர்வ இருக்கையில் மகிழ்ச்சியுடன் அமரச் செய்து கௌரம் அளித்து வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வித்தார்.



இதனை தொடர்ந்து சட்ட சபை கேள்வி நேரத்தின் போது கலரிக்கு அழைத்து செல்லப்பட்ட எ.ஆர்.ரஹ்மான் சபாநாயகர் மாகாண பாரள மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் MPP Logan Kanapathi அவர்களினால் அறிமுகம் செய்து உரை ஆற்றிய பொழுது எல்லோரும் எழுந்து நின்று கரகோஷம் செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

எ.ஆர் ரஹமான் பற்றிய அறிமுக உரையில் மேலும் பேசிய திரு லோகன் கணபதி பல உயரிய விருதுகளை வென்ற இசை புயல் தமிழ் மொழியின் அடையாளம் தனது சிறப்பான அரிய இசையால் நாம் வாழும் காலத்தில் பல மில்லியன் மக்களின் மக்களின் மனதை கொள்ளை கொண்ட இசைக் கலைஞன் மட்டுமன்றி தனது இசை மூலம் தமிழினத்தின் அடையாளமான தமிழை உலகமெல்லாம் எடுத்து செல்கின்ற மாபெரும் இசைக்கலைஞன் என்று புகழாரம் சூட்டினார்.

MPP Logan Kanapathi அவர்களினால் இசை புயலுக்கு வாழ்த்து மடல் வழங்கப்பட்டத்தை தொடர்ந்து CMR Ram Pirasanna அவர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த எ.ஆர் ரஹ்மான் கனடா வாழ் அனைத்து தமிழர்களுக்கும் நன்றி தெரிவித்தோடு தமது இரத்தமும் தமிழ் தான். தமிழ் தான் எம்மை எல்லாம் மேன்மைப்படுத்துகிறது ஒற்றுமைப் படுத்துகிறது தமிழ் வாழ்க என்று குறிப்பிட்டார்.

# காணாமல் போன இவர்கள் எங்கே? ஒன்ராறியோ மாகாண சபைக் கதவைத் தட்டிய தமிழர்கள்!

சிறிலங்கா அரசினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் எங்கே என்ற கேள்வியுடன் கனடாவின் ஒன்ராறியோ மாகாணசபையின் கதவினை நோக்கி ஒளிப்படங் காட்சிப்படுத்தல் இடம் பெற்றுள்ளது

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளான ஒகஸ்ற் 30 செவ்வாயன்று இலங்கைத்தீவில் சிறிலங்கா அரசினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கோரி, தமிழர் தாயகம் உட்பட புலம்பெயர் நாடுகள் எங்கும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

அந்த வகையில் கனடாவில் கனடா ஒன்ராறியோ மாகாணசபை முன்றிலில் ஒளிப்படங் காட்சிப்படுத்தல் இடம் பெற்றிருந்தது.

ஒன்ராறியோ மாகாண சபையில் தமிழினப் படுகொலை கற்கைநெறி தீர்மானம் நிறைவேற்றலுக்கு முழுமையாக பணியாற்றியவர்களான மாகாண மன்ற உறுப்பினரும் கலாச்சார அமைச்சின் செயலருமான மதிப்புக்குரிய லோகன் கணபதி, மாகாண கல்வி அமைச்சர் மதிப்புக்குரிய Stephen Lecce ஆகியோர் கலந்து கொண்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நீதிக்கான குரலை எழுப்பியிருந்தனர்.



கடந்த 2 ஆயிரம் நாட்களுக்கு மேலாக காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என நீதிகோரி போராடும் தாயகத்து தாய்மார்களது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் புலம்பெயர் தேசங்களில் கவனீர்ப்பு போராட்டங்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒருங்கிணைத்திருந்தது.

நூற்றுக்கும் மேற்பட்ட வேற்று இனத்தவர்கள் இந்த ஒளிப்படகாட்சிப் படுத்தலை பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்டதுடன், தமது சமூக வலைத்தளங்களில் இதனை நேரடியாக பகிர்ந்து கொண்டமை நீதிக்கான போராட்டத்துக்கு நம்பிக்கையினை தந்திருந்தது என நிகழ்வு ஒருங்கிணைப்பாளான நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதி திரு.மகா ஜெயம் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.



தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப் பட்டமையானது சிறிலங்கா அரசின் தமிழினவழிப்பு மூலோபாயத்தின் ஓர் பகுதியே என்பதோடு, பொறுப்புக் கூற வைப்பத்தற்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

நிகழ்வு நாளில் கொட்டிய கடும் மழையானது, நீதிகோரி 2 ஆயிரம் நாட்களுக்கு மேலாக போராடும் தாய் மார்கள், உறவுகளின் கண்ணீரை நினைவுபடுத்தியதாக அமைந்ததென உணர்வுகளை பகிர்த்தனர்.



# ஸ்டாலினின் கையிலா அ.தி.மு.வின் ஆயுள்?

தமிழகத்தை பொறுத்தவரை தி.மு.க. எதிர் அ.தி.மு.க. என்ற இருதுருவ அரசியல் விரைவில் இறுதி கட்டத்தை எட்டும் என்று இதற்கு பல்வேறு அரசியல் நெருக்கடியின் காரணமாக தற்போதைய ஆளுங்கட்சியான தி.மு.கவே



துணை போகும் என்றும், களநிலைமைகள் வெளிப்படுத்தியுள்ளன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவை உருவாக்கிய போது இது தொண்டர்களின் கட்சி என்று கர்ஜித்தார். அதற்கேற்ற வகையில் தொண்டர்களால் தான் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற விதிமுறையையும் எம்.ஜி.ஆர். அறிமுகப்படுத்தினார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரை தொடர்ந்து அக்கட்சியின் தொண்டர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புரட்சித்தலைவி ஜெயலலிதா, கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒன்றரைக்கோடி அளவிற்கு உயர்த்தினார்.

தற்போதைய நிலையில், ஒன்றரை கோடி உறுப்பினர்களைக் கொண்ட அ.தி.மு.கவை வழி நடத்துவது யார்? என்பது குறித்து, அக்கட்சியில் தொண்டர்களால் தீர்மானிக்க இயலாத நெருக்கடியான சூழலொன்று உருவாகி இருக்கிறது. மேலும் இக்கட்சி நீதிமன்றத்தின் ஆலோசனை மற்றும் உத்தரவின்படி நடக்க வேண்டிய கட்டாய சூழலுக்கும் தள்ளப்பட்டிருக்கிறது.

தற்போதைய தலைமைப்பதவியில் இருக்கும் பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர்களின் ஆதரவாளர்களால் தான் தற்போதைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் நடுநிலையான நிர்வாகிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன், அவர்கள் ஒரே தேசம்.. ஒரே மொழி, கலாசாரம், தேர்தல், அரசியல் கட்சியென எதிர்க்கட்சிகளே இல்லாத நிலையை ஏற்படுத்த திட்டமிட்டு பணியாற்றி வரும் பா.ஜ.க., தமிழகத்திலும் தன்னுடைய சித்து வேலையை காட்ட தொடங்கி இருக்கிறது. இதனை துல்லியமாக அவதானித்த மறைந்த புரட்சித் தலைவி, பா.ஜ.கவுடன் நட்பு பாராட்டினாரே தவிர, பா.ஜ.கவுடன் தேர்தல் கூட்டணியைக் கூட வைத்துக் கொள்ள சம்மதிக்கவில்லை. ஆனால் அவர்கள் மறைந்த பிறகு அம்மாவினுடைய ஆட்சியை நடத்துவதாக கூறிய முன்னாள் முதல்வர்களான பன்னீர் செல்வம் மற்றும் பழனிச்சாமி ஆகிய இருவரும் பாதைமாறிப் பயணிக்க ஆரம்பித்துள்ளனர் என்றும் கூறுகின்றனர்.

அது மட்டுமன்றி அவர்கள் தங்களின் நிர்வாகத் திறமையின்மை காரணமாகவும், அரசியல் அதிகாரத்தின் மீதான தீரா ஆசையினாலும், பா.ஜ.கவுடன் தேர்தல் மற்றும் கொள்கை ரீதியிலான கூட்டணியை வைத்துக் கொண்டனர். அதனை தற்போதும் தொடர்கின்றனர். இதனால் இந்த கட்சிக்கு தற்போது, தீய சக்தி என்று அம்மையாரால் அடையாளம் கட்டப்பட்ட தி.மு.கவின் கருணை பார்வையைக் கேட்டு பெற வேண்டிய நிர்கதியான நிலைக்கு ஆளாகி விட்டோம். எனத் தெரிவிக்கிறார்கள்.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் தி.மு.க.வை பலவீனப்படுத்துவதும், தி.மு.க.வினர் ஆட்சிக்கு வந்தால் அ.தி.மு.கவை பலவீனப்படுத்துவதும் காலம் காலமாக நடைபெற்று வரும் எழுதப்படாத ஒப்புக்கொள்ளப்பட்ட மரபு. ஆனால் 2014ஆம் ஆண்டிற்கு பிறகு மத்தியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பையேற்ற பின்னர், காங்கிரஸ் இல்லாத இந்தியா'வை உருவாக்க விரும்பியது.

அதாவது எதிர்க்கட்சிகளே இல்லாத நிலை உருவாக வேண்டும் என விரும்பியது. இதற்காக காங்கிரஸ் கட்சியை பல்வேறு ஏற்றுக்கொள்ள இயலாத உத்திகளை பயன்படுத்தி பலவீனப்படுத்தி, ஆட்சி அதிகாரத்தை இழக்க வைத்தது. தேசிய கட்சியான காங்கிரஸை பலவீனப்படுத்திய பிறகு, தற்போது பா.ஜ.கவின் பார்வை வீரியமுடன் இயங்கி வரும் மாநில கட்சிகளின் பக்கம் திரும்பியிருக்கிறது.

அந்த வகையில் பா.ஜ.க., அ.தி.மு.க.வுடன் உறவு வைத்துக் கொண்டு அக்கட்சியின் தலைவர்களை ஆதரித்து, கட்சியில் விரிசலை ஏற்படுத்தி, தற்போதைய அ.தி.மு.க.வின் பரிதாபகரமான நிலைக்கு காரணமாகி இருக்கிறது. திராவிட முறைமை பாணியிலான அரசியலை நடத்தி வரும் தி.மு.க.விற்கு, அ.தி.மு.க. பலவீனமாகி வருவது அரசியல் காரணங்களுக்காக நல்லது என்று ஏற்றுக் கொண்டாலும், தொலைநோக்குப் பார்வையில் அ.தி.மு.க. அழிவது ஆரோக்கியமானதல்ல.

மேலும் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற தூத்துக்குடி துப்பாக்கி சூட்டுச் சம்பவம் குறித்து எதிர்க்கட்சிகளின் வலிமையான வலியுறுத்தல்களால் அந்தக் காலகட்டத்தில் அமைக்கப்பட்ட நீதியரசர் அருணா ஜெகதீசனின் அறிக்கை தற்போது தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் மரணம் குறித்து நீதியரசர் ஆறுமுகசாமி தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையம், விரைவில் தன்னுடைய அறிக்கையினை அரசிடம் சமர்ப்பிக்கவிருக்கிறது.

இதைத் தொடர்ந்து கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 'சிமார்ட் சிற்றி' எனும் திட்டத்தில் நடைபெற்ற ஊழல் முறைகேடுகள் குறித்து ஓய்வு பெற்ற முன்னாள் இந்திய நிருவாக சேவை அதிகாரி டேவிதார் தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையமும் தன் இறுதி அறிக்கையை தமிழக அரசிடம் சமர்ப்பித்திருக்கிறது. இந்த மூன்று அறிக்கைகளிலும் கடந்த ஆட்சியில் தவறு செய்தவர்கள் குறித்த குறிப்புகள் இடம் பெற்றிருப்பதால் இதனை முன்னிறுத்தி நடவடிக்கை எடுத்தால், அ.தி.மு.கவின் தலைவர்களையும், அக்கட்சியையும் பலவீனப்படுத்தப்படும்.ஏற்கனவே தி.மு.க. தலைமையிலான அரசு பதவி ஏற்றவுடன் முன்னாள் அமைச்சர்களான தங்கமணி, வேலுமணி, வீரமணி, விஜயபாஸ்கர் உள்ளிட்ட பல அமைச்சர்கள் மீது இலஞ்ச ஒழிப்பு துறையினர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த புகாரில் அதிரடி சோதனையும், விசாரணையும் மேற்கொண்டிருக்கிறார்கள். இதன் மீதான தொடர் நடவடிக்கையும் அரசின் பரிசீலனையில் நிலுவையில் இருக்கிறது.



மத்திய அரசும் அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகளின் மூலம் மக்கள் செல்வாக்கு பெற்ற அரசியல்வாதிகளை அச்சுறுத்தியும், அதிரடி சோதனைகளை நடத்தியும், தங்களுக்கு இசைவாகவும், இணக்கமாகவும் நடந்து கொள்ளும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள். இந்நிலையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு என்ற இரட்டை தாக்குதலுக்கு அ.தி.மு.க. ஆழானால் அக்கட்சியின் அமைப்பு சிதைக்கப்படுவதை தடுத்து நிறுத்த முடியாது.

அதன் பிறகு அ.தி.மு.கவில் தொண்டர்கள் இருந்தும், மக்களிடம் ஆதரவு பெற முடியாதவொரு சூழல் உருவாக்கப்படும். இதனை தவிர்க்க வேண்டும் என்றால், திராவிட அரசியலின் ஒரு முனையான அ.தி.மு.க. தமிழகத்தில் தொடர்ந்து திராவிட சித்தாந்தங்களுடன் உயிர்ப்புடன் இயங்க வேண்டும். அதற்கு தி.மு.கவின் அரசியல் ரீதியிலான

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

காழ்ப்புணர்ச்சியற்ற பார்வையே அவசியமாகவுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் வலிமையாக செயல்படும் எதிர்க்கட்சி நாங்கள் மட்டும் தான் என்று மார்த்தட்டும் பா.ஜ.கவை ஓரங்கட்ட வேண்டும் என்றால், தி.மு.க., அதிமுக விவகாரத்தில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதுவே தமிழகத்தில் திராவிட சித்தாந்தம் நீண்ட ஆயுளுடன் நீடிப்பதற்கான வழியாகும் என்று ஜனநாயக விரும்பிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

எனினும் அ.தி.மு.கவின் விடயத்தில் தி.மு.கவின் தலைவரான ஸ்டாலின் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை அரசியல் ரீதியில் முக்கியமானது. பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி ஆகிய அ.தி.மு.கவின் இரு தலைவர்களுக்கு இடையேயான கட்சி தலைமைக்கான போட்டி என்பதைக் கடந்து, அக்கட்சி தொடர்ந்து உயிர்ப்புடன் செயற்பட்டு, தேர்தல் அரசியலில் பங்கு பற்றி, மக்களின் ஆதரவை பெற முடியும். இதற்கு தற்போது ஏற்பட்டிருக்கும் அசாதாரணமான சூழலை கருத்தில் கொண்டு தி.மு.க. முடிவு எடுத்தால், அ.தி.மு.கவின் அரசியல் நடவடிக்கை மத சார்பற்ற நோக்கத்துடனும், சிறுபான்மையினரின் ஆதரவுடனும் தமிழக மக்கள் நலனுக்காதாக தொடரும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அதே தருணத்தில் பா.ஜ.க. ஆதிக்கம் செலுத்தி, குறுக்கு வழியை பயன்படுத்தினாலும் அ.தி.மு.கவை அழிக்க இயலாது என்பதும் உறுதி. இருப்பினும் பலவகையினதான சோதனைகளால் சோர்வடைந்திருக்கும் அ.தி.மு.கவை, இது தான் சரியான தருணம் என அவர்களை அழித்தெடுக்கும் பணியில் தி.மு.க. தீவிரம் காட்டுவது பொருத்தமானதல்ல.

# தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஆற்றல் உண்மை தானா?

ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சில தனி நபர்கள் மீதான தடையை நீக்கியிருக்கின்றது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். இது தொடர்பில் நான் முன்னரே குறிப்பிட்டிருக்கின்றேன்.

இதனை வெறுமனே பொருளாதார நெருக்கடியின் விளைவாக மட்டும் நோக்கினால் அது முழுமையான பார்வையாக இருக்காது. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் சிலர் மீதான தடை நீக்கப்பட்டது. கோட்டபாய ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்ததை தொடர்ந்து மீளவும் தடை விதிக்கப்பட்டது. இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதை தொடர்ந்து மீளவும் தடைநீக்கப்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம் புலம்பெயர் சமூகத்தினுடான ஊடாட்டங்களை அதிகரிக்க விரும்புகின்றது. அதற்கான கதவுகளை திறந்து வைக்க விரும்புகின்றது. ரணில்–மைத்திரி ஆட்சிக் காலத்தில் இதற்கான பகுதியளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் சில வெற்றிகளையும் அரசாங்கம் எட்டியிருந்தது. தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஒரு பகுதியினர் கொழும்புடன் உரையாடுவதற்கு இணங்கியிருந்தனர்.

இதன் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை ஒரு புதிய விடயமும் இடம் பெறவுள்ளது. அதாவது புலம்பெயர் அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதனையும் வெறுமனே பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்கான ஒரு தந்திரோபாயமாக மட்டுமே நோக்குதல் சரியல்ல.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புலம்பெயர் சமூகத்தை ஒரு தரப்பாக அணுக விளைகின்றது. இதில் சாதகமும் உண்டு பாதகமும் உண்டு. தமிழ் புலம்பெயர் சமூகம் தாயகத்தின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் உத்தியோகபூர்வமாக தலையீடு செய்வதற்கான கதவுகள் திறக்கப்படுகின்றன. ஆனால் மறுபுறம் புலம்பெயர் சமூகத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு பிரத்தியேக இடத்தை வழங்குகின்ற போது, தாயகத்திலுள்ள அரசியல் தரப்புக்களும் புலம் பெயர் அமைப்புக்களும் ஒரு புள்ளியில் சந்திக்காது விட்டால், அது இறுதியில் தாயக அரசியலை பலவீனப்படுத்தவே பயன்படும். இந்த விடயத்தில் புலம் பெயர் அமைப்புக்கள் மிகுந்த நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் அரசாங்கம் ஒரு தந்திரோபாய நகர்வை மேற்கொள்ளுகின்றது. அதனை எதிர்கொள்ள வேண்டுமாயின் எதிர் – தந்திரோபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

முதலாவது தற்போது அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கையானது முற்றிலும் தமிழ் புலம்பெயர் சமூகத்தை மட்டும் இலக்காகக் கொண்டதல்ல. புலம்பெயர் அலுவலகம் என்பது, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை அணுகுதல் என்னும் இலக்கையே கொண்டிருக்கின்றது. சிறி.நரேந்திர மோடி பிரதமரானதைத் தொடர்ந்து, இந்திய புலம்பெயர் சமூகத்துடன் ஊடாடும் நிகழ்சித் திட்டமொன்றை அவர் முன்னெடுத்திருந்தார்.

கிட்டத்தட்ட இதுவும் அவ்வாறான ஒன்று தான். ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களை, தங்களது சொந்த நாட்டின் வளர்ச்சியின் மீது ஈடுபாடுள்ளவர்களாக மாற்றுவதும், அவர்கள் இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் ஊடாடுவதற்கான சந்தர்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதுமே புலம்பெயர் அலுவலகத்தின் பிரதான இலக்காக இருக்கப்போகின்றது. இதில் தமிழர்கள் பிரதானமாக நோக்கப்படுவர் ஏனெனில் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் புலம்பெயர் சமூகமளவிற்கு சிங்கள சமூகம் வளர்சியடைந்திருக்கவில்லை.

இதனை நமது புலம்பெயர் சமூக அமைப்புக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? வழமை போல் சாதாரணமாக எதிர்த்து விட்டு கடந்து போகும் அணுகுமுறையை கைக் கொள்ளப் போகின்றோமா அல்லது, ஒரு எதிர்–தந்திரோபாய அடிப்படையில் கையாளப் போகின்றோமா? ஒரு விடயத்தை தெளிவாக குறித்துக் கொள்ள வேண்டும். அதாவது, நமது புலம்பெயர் அமைப்புக்கள் இதனை நிராகரிக்கலாம் ஆனால், உடன்பட்டுச் செல்பவர்களுடன் ஊடாடுவதன் மூலம், புலம்பெயர் அலுவலகத்தை இயக்க முடியும். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் சிங்களவர்கள் இதற்கு பெருமளவில் ஆதரவை வழங்குவர். ஆனால் பொதுவாக புலம்பெயர் சமூகத்துடனான ஊடாட்டமாகவே இது காட்சிப்படுத்தப்படும்.

யூத டயஸ்போறா போன்ற நிலையில் ஈழத் தமிழர்கள் இல்லா விட்டாலும் கூட, கருத்தில் கொள்ளத்தக்க ஒரு டயஸ் போறாவாக, புலம்பெயர் ஈழத் தமிழர்கள் திரட்சி பெற்றிருக்கின்றனர். காலப் போக்கில் இந்த நிலையில் மேலும் வளர்சியேற்படலாம். ஆனால் அந்த வளர்ச்சியென்பது தாயகத்தில் வாழும் மக்களுக்கு பயன்படவில்லையாயின், புலம்பெயர் சமூகமென்பது பயனற்ற ஒன்றாகி விடும் ஆபத்துண்டு.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில், ஈழத் தமிழர் புலம்பெயர் சமூகம் பெருமளவு திரட்சி பெற்ற சமூகமாக இருந்தது. தாயகம் தொடர்பான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் மேலோங்கியிருந்தது. 2009இற்கு பின்னர் இந்த நிலைமை பெருமளவு வீழ்சியடைந்துவிட்டது. பொதுவாக தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் என்று கூறிக் கொண்டாலும் கூட,

இதில் பல பிரிவுகளும் பார்வைகளும் உண்டு. இந்த நிலையில் தான், கொழும்பு, புலம்பெயர் சமூகத்தை ஒரு தரப்பாக அணுகும் தந்திரோபாயமொன்றை முன்னெடுக்க முயல்கின்றது.

மற்றவர்கள் எங்களை நோக்கி வருகின்ற போது, அதனை எதிர் கொள்ளாமல் விலகிக் கொள்வது ஒன்று. இரண்டு அதனை எதிர் கொண்டு, அவர்கள் திறக்கும் கதவுகளால் சென்று, அதனை கையாள முற்படுவது என்பது இன்னொன்று. ஆனால் இந்த விடயத்தில் விலகிக் கொள்வது புத்திசாதுர்யமான அணுகுமுறையாக இருக்க முடியுமா?

தமிழ் புலம்பெயர் சமூக அமைப்புக்கள் தங்களை ஒரு பலமாக முன்னிறுத்துவதற்கான ஒரு வாய்ப்பு நமது கதவை தட்டுகின்றது. இதனை எவ்வாறு கையாளலாம்? இதனை கையாளுவதற்கு தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் ஒரு வேலைத்திட்டத்திற்குள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். குறுகிய கால நிபந்தனைகளின் அடிப்படையில் விடயங்களை கையாள முற்படலாம். தாயகத்திலுள்ளவர்களும், புலம்பெயர் அமைப்புக்களும் இணைந்து குறித்த குறுகியகால நிபந்தனைகளை திட்டமிடலாம். புலம்பெயர் அலுவலகம் என்பது அடிப்படையில் மத்திய அரசின் கீழுள்ள கட்டமைப்பாகவே இருக்கும். தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் தமிழர் தாயகத்துடன் நேரடியாக ஊடாடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. மாகாண சபைகள் இயங்குமாக இருந்தால் அதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும்.

இவ்வாறானதொரு பின்னணியில் புலம்பெயர் அலுவலகத்துடன் தமிழ் புலம்பெயர் சமூகம் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும்? இந்த இடத்தில் தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு நிபந்தனையை முன்வைக்க முடியும்.

அதாவது, வடக்கு கிழக்கிலுள்ள சுயாதீன அமைப்புக்களுடன் இணைந்து தடையற்ற வகையில் செயற்படுவதற்கான சந்தர்பங்களை புலம்பெயர் அலுவலகம் ஏற்டுபடுத்த வேண்டும். தேசிய பாதுகாப்பு கருதி சில கண்காணிப்புக்கள் (மறைமுகமாக) இருந்தாலும் கூட, தமிழ் புலம்பெயர் சமூகத்தின் தாயக செயற்பாடுகளில் எவ்வித இடையூறுகளும் இருக்கக் கூடாது. இதற்கான உத்தரவாதங்களை புலம்பெயர் அலுவலகம் உறுதிப்படுத்த வேண்டும். இப்படியான கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று சாத்தியப்படும் வரையில், தமிழ் புலம்பெயர் சமூகம் மத்திய அரசின் அங்கங்களோடு இணைந்து செயற்பட முடியாதென்னும் நிபந்தனையை முன்வைக்கலாம். இதனை நிராகரிப்பதற்கான வாய்ப்புக்கள் தற்போதைய சூழலில் இல்லை. ஒரேயடியாக நிராகரித்துவிட்டுச் செல்வதற்கு பதிலாக, இவ்வாறான அணுகுமுறையின் மூலம் ஊடாடுவது, ஒரு தந்திரோபாய அணுகுமுறையாக இருக்கின்ற அதே வேளை, புலம்பெயர் சமூகம், தாயகத்திலுள்ள அமைப்புக்களுடன் இணைந்து, இயங்குவதற்கான வாய்ப்பும் உருவாகும் ஒரு வேளை ஒரு கட்டத்தில் இது தோல்வியுற்றாலும் கூட, தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை. ஏனெனில் ஏற்கனவே செய்யப்பட்ட பணிகளால் தாயக மக்கள் நன்மைடைந்திருப்பர்.


குறுகிய கால நிபந்தனைகளை அரசாங்கம் எவ்வாறு நிறைவேற்றுகின்றது என்பதற்கு அமைவாக, தமிழ் புலம்பெயர் சமூகம் அதன் ஊடாட்டத்தை அதிகரிக்கலாம். தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு பலமாக திரட்சி பெற்றிருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கான தருணமிது. ஆனால் இதனை போதிய தயாரிப்புடனும் தந்திரோபாயத்துடனும் அணுக வேண்டும். உணர்சி வசப்பட்டும் அணுகக் கூடாது அதே வேளை, வழமையான எதிர்பரசியல் அணுகுமுறையின் ஊடாகவும் அணுகக் கூடாது. அத்துடன் போதிய வெளிப்படைத் தன்மையில்லாமல், ஒவ்வொருவரும் தங்களுக்கிருக்கும் தொடர்புகளின் வழியாகவும் அணுகக் கூடாது. இது தொடர்பில் விரிவான கலந்தாலோசனைகள் அவசியம்.

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணைய வழிக் கலந்துரையாடல்
நாள் : 16 செப்டம்பர் ( வெள்ளிக்கிழமை 2022 )
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி (கனடா ரொறன்ரோ )
நாள் : 17 செப்டம்பர் ( சனிக்கிழமை 2022 )
நேரம் : காலை 1:00 – 3:00 மணி ( இலண்டன் )
காலை 5:30 – 7:30 மணி ( இலங்கை, இந்திய )
காலை 10:00 – 12:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி )
நூல்களைப் பேசுவோம்
பேசுநூல் :
"டாக்டர் சப்மன் வைத்திலிங்கம் – (1843-1900)"
( யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் எஸ்.எவ்.கிறீன்
தொடக்கிய மருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய
வைத்திய மேதையின் வாழ்வும் பணிகளும் )
நூலாசிரியர் : பேராசிரியர் அ. சின்னத்தம்பி
பேசுபவர்: எழுத்தாளர் க.சண்முகலிங்கம்
Zoom ID: 84777257162 Passcode: 554268







# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதையும் யோசித்து செய்வது நன்மை தரும். கோபமாக பேசுவதை தவிர்த்து நிதானமாக பேசி செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும். வீடு மனை வாகன ப்ராப்தி ஏற்படும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேற்றுமைகள் நீங்கும்.




ரிஷபராசி அன்பர்களே! சூரியன் புதனுடன் சேர்க்கை பெறுவதால் எதிலும் வெற்றியும் சந்தோஷத்தையும் தரும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகளில் தீர்வு கிடைக்கும். வீடு மனை சார்ந்த விஷயங்கள் நன்மை தரும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள்.





மிதுனராசி அன்பர்களே! சில முக்கிய முடிவுகள் எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். குடும்பத்தில் கணவன்-மனைவிக்கிடையே எதையும் மனம் விட்டு பேசி அதன் பிறகு செய்வது நன்மை தரும்.




கடகராசி அன்பர்களே! பொருள் சேர்க்கை உண்டாகும். செவ்வாய் சஞ்சாரம் இட மாற்றத்தை ஏற்படுத்தும். எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை உண்டாகும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.




சிம்மராசி அன்பர்களே! முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விஷயங்களில் கூட மனநிறைவு ஏற்படும். வீடு மனை சார்ந்த விஷயங்களில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். வார்த்தைகளில் நிதானத்தை கடைபிடித்தால் கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கலாம்.




கன்னிராசி அன்பர்களே! திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.அனைத்து தடைகளும் அகலும். உடல்நிலையில் தகுந்த கவனம் அவசியம். குடும்பத்தில் மன நிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். விருந்தினர் வருகை இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். ராசியை செவ்வாய் பார்ப்பதால் மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும் போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். உடல்நிலையில் இருந்து வந்த தேக்கநிலை மாறும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். கணவன், மனைவியிடையே மனஸ்தாபங்கள் அகலும்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. மன திருப்தி உண்டாகும். வீடு மனை சார்ந்த விஷயங்கள் வேகம் பிடிக்கும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும்.







தனுசுராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். தகராறு வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். வீடு மனை சார்ந்த விஷயங்கள் கைகொடுக்கும். குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும்.




மகரராசி அன்பர்களே! காரியங்கள் சாதகமாக நடைபெறும். எதையும் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். எதிலும் இருந்த இழுபறியான நிலை மாறும். குடும்பத்தில் எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் டென்ஷன் உண்டாகலாம். . உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் டென்ஷன் வீண் அலைச்சலும் இருக்கும்.




கும்பராசி அன்பர்களே! குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை சார்ந்த விஷயங்களில் நல்ல மாற்றம் ஏற்படும். உடல்நிலையில் மிக அதிக கவனம் அவசியம். குடும்பத்தினருடன் இருந்து வந்த மனக்கசப்புகள் அகலும். கணவன், மனைவிக்கிடையே பந்தபாசம் அதிகரிக்கும்.




மீனராசி அன்பர்களே! போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். மன நிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும்.குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. கணவன்,மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து பேசுவது நல்லது. எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கை அரகலய போராட்டம் தோல்வியில் முடிந்து விட்டதா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) 10. உண்மையான மக்கள் ஆதரவும் எதிர்பார்ப்பும் இந்தப் போராட்டத்தின் மீதிருந்தது. ஆனால், இன்று அது அரைகுறை நிலைக்குள்ளாகி விட்டது. போராட்டமும் அரை குறை நிலைக்குள்ளாகி விட்டது. இது அரசாங்கத்திற்கு மேலும் அதிக உற்சாகத்தைக் கொடுத்து விட்டிருக்கிறது. என்பதால் தான் குற்றச்சாட்டுகளோடு பின்னகர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளும் முண்டியடித்துக் கொண்டு முன்னே வந்து அமைச்சுகளுக்கும் அதிகாரத்துக்குமாக அடிபடுகின்றன.

11.ரலாறு தந்த மிக எழுச்சியான மக்கள் போராட்டமொன்று, உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த மக்கள் எழுச்சியொன்று இடைநடுவில் தடுமாறி நிற்பது மாற்றங்களை விரும்புவோர் அனைவருக்கும் கவலையளிப்பதே. ஆனால், இத்தகைய நிலை ஏற்படும் என்று இதனைக் கூர்மையாக அவதானித்தோர் ஏற்கனவே தீர்மானித்திருந்தனர். அவர்கள் தங்களுடைய கவலைகளை நட்புடன் வெளிப்படுத்தியுமிருந்தனர். இன்று உலகமெங்கும் புரட்சிகர எண்ணமுடைய இளையை தலைமுறைக்குள்ளே பல விதமாகவும் ஊடுருவி, உள் நுழைந்து அமெரிக்கா தொடக்கம் பெரிய வல்லரசுகள் அனைத்தும் முயற்சிக்கின்றன. இதில் அவைமிகத் தேர்ச்சியையும் புதிய நுட்பங்களையும் தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கின்றன. இதைப் பற்றிய புரிதலோடு நாம் செயற்படவில்லை என்பது கவலையே.

இப்படிப் பல விடயங்கள் இந்தப் போராட்டத்துடன் சம்மந்தப்பட்டுள்ளன. இதை முற்று முழுதாக அறிவியற் கண் கொண்டு பார்க்க வேண்டியது அவசியமாகும். இலங்கைத்தீவில் பல விதமான போராட்டங்கள் இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிறகு நடந்துள்ளன. இதில் ஆயுதந்தாங்கிய போராட்டமும் அடங்கும். அரசியல் ரீதியான ஜனநாயக வழிப் போராட்டங்களும் உண்டு. ஆனால் அரசு எல்லாவற்றையும் தன்னுடைய அதிகாரத்தின் மூலமாக அடக்குவதிலேயே கரிசனை காட்டி வந்துள்ளது. இப்பொழுதும் அதே வழிமுறையைத்தான் பின்பற்றுகிறது.

போராட்டம் ஒன்று ஏன் உருவானது? மக்கள் ஏன் அதனை ஆதரிக்கின்றனர்? அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? அவற்றின் நியாயத்தன்மை தேவை என்ன? என்பதைக் குறித்து அரசாங்கம் ஒரு போதுமே சிந்திப்பதாக இல்லை. இது பிரச்சினைகளை மேலும் வளர்க்குமே தவிர, தீர்க்கப்போவதில்லை. இப்பொழுது வெளிப்படையான ஒரு உண்மை உண்டு.

போராட்டத் தரப்பினால் தான் அமைச்சரவையிலும் பிரதமர், ஜனாதிபதி பதவிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. அப்படியென்றால் போராட்டம் சரியான முறையில் செயற்பட்டு, பொருத்தமற்றவர்களை விரட்டியிருக்கிறது என்றே பொருளாகும். அப்படிப் பார்த்தால் அதை இந்த வாய்ப்பை உருவாக்கித்தந்த போராட்டக்காரர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்றாகும். இந்த நிலையில் அவர்களை எதற்காக எந்த அடிப்படையில் சிறைப்படுத்த முடியும்?

ஆனால் இந்தக் கேள்விக்கு ரணில் விக்கிரமசிங்கவோ அரசாங்கத்திலிருக்கும் வேறு எவருமோ பதில் சொல்லப்போவதில்லை. ஏன் ஊடங்களின் கவனமும் இவர்களிலிருந்து மெல்ல மெல்ல அகலகத் தொடங்கிவிட்டது. நம்முடைய ஊடகங்களில் பலவற்றிலும் செல்வாக்குச் செலுத்துவன வெளித்தரப்புகளே. ஆகவே அவை தமக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை அனுசரித்தே செயற்படும்.

இப்பொழுது போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக மிகச் சிறிய எண்ணிக்கையானோரே குரல் எழுப்புகிறார்கள், வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள். இவர்களும் அடுத்த கட்டத்தில் இலக்கு வைக்கப்பட்டு சிதறடிக்கப்படுவர்.

போராட்டமும் மக்கள் பங்கேற்பையும் மக்கள் ஆதரவையும் கோரி நிற்பதை விட, வெளிச் சக்திகளை அதிகம் நம்பும் அளவுக்கு மாறியுள்ளது. இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும்போது போராட்டக்காரர்களில் ஒரு தொகுதியினர் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு தம்மீது மேற்கொள்ளப்படும் அரச வன்முறையையும் அடக்குமுறையையும் சொல்லி மகஜர்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இது மக்களை நம்புவதை விட வெளிச்சக்திகளை அதிகமாக நம்பும் தமிழ்த் தலைமைகளின் வழிமுறையை ஒத்தது. தமிழ்த் தலைமைகளும் பல ஆயிரக்கணக்கான மகஜர்களை இந்தத் தூதரகங்களுக்குக் கடந்த காலத்தில் கொடுத்துள்ளனர். ஒரு மகஜர் கூடக் கவனத்திற் கொள்ளப்பட்டதில்லை. ஏதோ கொடுத்தோம் என இவர்களும் எதையோ தந்தார்கள், வாங்கினோம் என தூதரகத்தினரும் கருதிக் கொண்டிருக்கின்றனர். அவ்வளவுதான். இந்தப் போராட்டமும் அவ்வளவுதான் என்ற கட்டத்துக்கு வந்துள்ளதா? என்றே கேட்கத் தோன்றுகிறது.

(7ம் பக்கத் தொடர்ச்சி) எதிரான 3 தசாப்த காலப் போரையும் கடந்து இப்போதும் அந்த நாடு உலகின் முன்னிலையில் மிகுந்த துணிச்சலுடனும் பெருமிதத்துடனும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் சுயாட்சி மீதான எந்தவொரு தலையீடும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். வெளிநாடொன்றின் கப்பலை அதன் கோரிக்கைக்கு அமைவாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்குள் அல்லது வேறு துறைமுகத்திற்குள் அனுமதிப்பது என்பது தமது இறையாண்மைக்கு அமைவாக முற்றுமுழுதாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும்.

ஆனால் எவ்வித ஆதாரங்களுமின்றி 'பாதுகாப்புசார் கரிசனைகள்' என்று கூறிக கொண்டு வெளியகத்தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட இடையூ றுகள் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மைமீது ஏற்படுத்தப்பட்ட தலையீடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இருப்பினும் சீனா மற்றும் இலங்கையின் கூட்டிணைந்த முயற்சியால் இந்த விவகாரம் சீராகத் தீர்க்கப்பட்டதுடன் அது இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை மாத்திரமன்றி சர்வதேச நியாயத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றையும் பாதுகாத்து விட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருப்பதுடன் இதன்போது பெரும்பாலும் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் மீண்டும் பேசுபொருளாகக் கூடும். இலங்கை மக்கள் இன்னமும் மிகப் பாரிய பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில், எப்போதும் மனித உரிமைகள் தொடர்பில் உபதேசம் செய்கின்ற நாடுகள் என்ன செய்தன என்று பலரும் எண்ணிப்பார்க்கக்கூடும். அவர்கள் அவசியமான ஆதரவை வழங்குவதன் மூலம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் முன்னேற்றமடைவதற்கு உதவுவார்களா? அல்லது அவர்கள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தொடர்ந்து தலையீடு செய்வதற்கான ஓர் மறைமுகக்கருவியாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவார்களா? என்று அவர் அவ்வறிக்கையில் கேள்வியெழுப்பியுள்ளார்.


கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வளர்ச்சிக்காக
நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளும் இராப்போசன விருந்தும்
SEP 3 SAT 6:00 PM
Nritya Dance Company
SENTHURAN ALAGAIYA
SUPER SINGER SARIKA
SUPER SINGER SINMAYE
SINGER HARI KARA SUTHAN
Amirthalaya Academy of Fine Arts
Smt. Lalithanjana Kathirgaman
Natiyakalai
Art Of Bharathanatyam
இராகமழை 2022
Sringeri Hall
80 Brydon Dr, Etobicoke, ON M9W 4N6
416-213-0110
TICKETS $100
FOR FAMILY OF 4
www.shrimuththumaari.com
Facebook / Canada Shri Muththumaari Amman
All Your Real Estate Needs....
JEYA Saam
Sales Representative
416.262.1400
1265 Morningside Ave Suite 203
Bus:(416)287-2222
KS Window Coverings
Residential & Commercial
Sangeetha Kannan
416 270 9643 647 289 6483
Kannan Narayanasamy
416.556.9494
www.kannahomes.com
Cherrycrest DENTAL CENTRE
905-913-0055
25 Cherrycrest Drive, Unit 5, Brampton, ON L6P 3W4
Dr. M. Sathiyabalan
Buying, Selling, Leasing or Investing?
Jay Sritharan
Salesperson
Dir: 647.569.9392 Off: 416.581.8000
jaysri@upstaterealty.ca
Amazing Electric Motors Ltd.
Kenney Nithiy | 416-291-7342 | 416-540-8878
www.amazingelectric.ca | 450 Passmore Ave, Unit 19
WIGNA REAL ESTATE
Wigna Sivapathasundaram
Vimalraj Vimalathasan
FRAMEXPRESS
BASEMENT FRAMING
Tel: 343-987-1299
WINNER STAFFING SOLUTION
PRABHU
ஊடக அனுசரணை
ANALAI EXPRESS
CTR
ஈழநாடு
416-841-9600
CANADA SHRI MUTHTHUMAARI AMMAN TEMPLE
POOJA TIMING
MORNING 9:30 A.M. AFTERNOON 12:00 P.M. EVENING 7:30 P.M.
Opening Hours :
Morning 9am - 1pm
Evening 5pm - 9pm
www.shrimuththumaari.com
Facebook / Canada Shri Muththumaari Amman
BS.KISHOR Transportation
Call Babu 647.654.3814
CENTUM Advance Realty Inc.
Thusi Sivarajah
Mortgage Consultant
416.837.1549
BEST MORTGAGE RATE IN TOWN
SP Auto Collision Ltd.
BEST PRICE IN GTA
PRASANTH
647-701-5083
124 Manville Rd, Scarborough, ON M1L 4J5
TOYOTA
Esan Beauty Salon
416 - 626 - 8421
Window Glass & Door Services
தேவி நகை மாளிகை
DEVI JEWELLERYS
Tel: 416-850-9101
2625 Eglinton Ave E Scarborough, ON M1K 2S2
UTHAYA'S SUPER MARKET
SAMY & SONS
EAZY CARRY
TAKE OUT RESTAURANT
SOORIYA DECORATION
416 588 9901
416 454 8709
TKN
GOLDEN SUPPLIES
Three Star Auto
ANANDBHAVAN RESTAURANT
5310 Finch Ave E #24
416-883-0450

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE



• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE HIGHER STANDARDS
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown[3]




iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

